
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU



முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 01 சனிக்கிழமை (17.12.2011) பக்கங்கள் 16 ஓசை – 77










# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை நேற்றையதினம் அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வாவினால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கடந்த நவம்பர் மாதம் 20 ஆம திகதி ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த நிலையில் ஆணைக்குழுவின் அறிக்கையை நேற்றையதினம் நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய சபை முதல்வர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இறுதிக்கட்ட யுத்தத்துடன் தொடர்புடைய சர்வதேச மனிதாபிமான சட்டம் பற்றிய விபரங்களை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விரிவாக தமது அறிக்கை மூலம் தெளிவுபடுததியுள்ளதாக தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அதிகாரத்தை துஷ்பிரயோகப்படுத்திச் சட்டத்தை மீறிய சம்பவங்கள் (15 ஆம் பக்கம் பார்க்க)

## வரும்? வராது?

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் திங்கட்கிழமை 19 ஆம் திகதி வெளியிடப்படலாம் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்துள்ள நிலையில் நடந்து முடிந்த கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் திங்கட்கிழமை 19 ஆம் திகதி வெளியிட முடியாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

## சம்பந்தரின் பிரதி மாயம்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் எம்.பிக்களுக்கு நேற்று விநியோகிக்கப்பட்டபோது தமிழ்த தோசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கும் அக்கட்சியின் ஏனைய சில உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்ட பிரதிகள் காணாமல் போயின. சம்பந்தனுக்கு வழங்கப்பட்ட பிரதிகளை ஐக்கிய தேசியக் கட்சியில் உயர் பதவியொன்றை வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எடுத்துச்சென்றதாகத் தெரியவந்தது.

இதனால் விசனமடைந்த சம்பந்தன் எம்.பி. நாடாளுமன்ற அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தார். அதன்பின் நாடாளுமன்றத்திற்கு சமுகமளிக்காத ஆளுங் கட்சி உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு வழங்கப்படவிருந்த பிரதி இரா. சம்பந்தனுக்கு வழங்கப்பட்டது.

## நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை பஞ்சதந்திர கதைபோல் உள்ளது

### என்கிறது கூட்டமைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் நேற்றையதினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக குழுவின் அறிக்கை பஞ்சதந்திரக் கதை போல் உள்ளது. இதனை முழுமையாக வாசித்தறியாமல் இது பற்றி கருத்து எதுவும் தெரிவிக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றிய அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் உரைக்கு பதிலளித்து பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக குழுவின் அறிக்கையை படிக்காமலே நாடாளுமன்றில் சிலர் அதனைப் பாராட்டி பேசுகின்றனர். உண்மையில் இந்த அறிக்கையானது பஞ்சதந்திரக் கதையைப் போல உள்ளது. இதனை முழுமையாக வாசித்தறியாமல் இது பற்றி கருத்து எதுவும் தெரிவிக்க (15 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டுக் கொள்ளைச் சம்பவம் முக்கிய நபர் பொலிஸாரால் கைது

குடாநாட்டில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவரை நேற்று முன்தினம் நாயன்மார் கட்டுப்பகுதியில் வைத்து கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. குறித்த நபரை நீண்ட காலமாகப் பொலிஸார் தேடிவந்ததாகவும் நேற்று முன்தினம் நாயன்மார்கட்டுப் பகுதியில் இருந்து பொலிஸாரிற்குக் கிடைத்த தகவலை அடுத்து இவர் கைது செய்யப்பட்டார். இவரைக் கைதுசெய்த வேளை அவர் பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்படும் நீளமான கூரிய வாள் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த நபர் பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் யாழ்பொலிஸ் நிலைய வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.(பா)

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடம் மன்னிப்புக் கோருகிறது ஆணைக்குழு


(கொழும்பு)

இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல மக்களிடமும் மன்னிப்புக் கோருவதாக நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்துள்ளது. சகல தரப்புக்களையும் சாரந்த தலைவர்கள் முரண்பாடுகளை களைந்து யுத்தத்தில் பாதிக்கப்பட்ட அப்பாவி பொதுமக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டுமென ஆணைக்குழுவின் இறுதிக் அறிககையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசியல் தலைமைகளின் பலவீனமே முரண்பாடுகளுக்கு காரணம். நல்லிணக்க முனைப்புக்களில் மதத் தலைவர்களும் சிவில் அமைப்புக்களும் கூடுதல் ஆர்வம காட்டவேண்டும். யுத்தத்தினால் ஏற்பட்ட (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர்குழுவிற்கு பதிலளிக்க இராணுவம் தயாரித்த அறிக்கை தயார்

### தளபதி ஜகத் ஜயசூரிய அறிவிப்பு



(கொழும்பு)

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய் என்பதை நிரூபிக்க இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு றொக் ஹவுசில் இராணுவத்தின் கவசப்படைப் பிரிவின் 56 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு இராணுவம பதில் அளிக்கவுள்ளது. இந்த அறிக்கையைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

போரின் இறுதிக்கட்டத்தில் வண்ணியின் கிழக்கில் நிலை கொணடிருந்த படைப்பிரிவுகள் பற்றிய தவறான தகவல்களை ஐ.நா. நிபுணர்குழு அறிக்கை உள்ளடக்கியிருந்தது.

இவை பொய்யான குற்றச் சாடடுகள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான அறிக்கை விரைவில் ஐ.நா. விடம் சமர்ப்பிக்கப்படும். நிபுணர் குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஒளிப்பட, காணொளி, செய்மதிப்பட ஆதாரங்களும் இந்த அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன.


புதுக்குடியிருப்பில் அறிவிக்கப்பட்ட பொதுமக்களுக்கான பாதுகாப்பு வலயத்தில் இருந்து 200 மீற்றர் தொலைவில் இராணுவம் நிலைகொண்டு படை நடவடிக்கைகளை மேற்கொண்டதாக ஒரு பொயயான குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது.

ஆனால் அப்போது, படையினர் சிலகிலோ மீற்றருக்கு அப்பாலேயே நிலைகொண்டிருந்தனர்.

இதனை நிரூபிக்கும் வகையில குறிப்பிட்ட நாளில் எடுக்கப்பட்ட (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் பலவீனம் ஜனாதிபதியின் பலம்

### ரணில் கூறுகிறார்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை பலவீனமடையச் செய்வது ஜனாதிபதியை பலப்படுத்தும் செயல் என ஐக்கியக் தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். நான் ஒரு பௌத்தர் என்ற போதிலும் எனது பாதுகாப்புக்கோ, கட்சியின் பாதுகாப்புக்கோ., பௌத்த மதத்தை பயன்படுத்தியது இல்லை.

இந்த நிலையில் எனது பலத்தைக் கொணடே கட்சியை முன்னெடுத்துச் செல்கினறேன். பொதுமக்களை சக்திமயப்படுத்த வேண்டுமாக இருந்தால், ஐக்கிய தேசியக் கட்சியை சக்தி மயபபடுத்த வேண்டும். கட்சியில் ஒற்றுமையை ஏற்படுத்தி, முன்னெடுத்து செல்லவேண்டியது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# பருத்தித்துறையில் பொது சுகாதார மேம்பாடு செஞ்சிலுவை உதவியுடன் மலசல கூடங்கள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பொதுச் சுகாதாரத்தைப் பேணுவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இதன் முதற் கட்டமாக பொதுமக்களின் பாவனைக்காக மலசல கூடங்களை அமைத்துக்கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்க சம்மேளனத்தின் நிதி உதவியுடன் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் முதற்கட்டமாக 200 மலசல கூடங்கள் அமைப்பதற்கான ஆரம்பக் கட்ட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஜே/401, ஜே/402, ஜே/403, ஜே/404, ஜே/405, ஜே/407, ஜே/408, ஜே/409, ஜே/411, ஆகிய ஒன்பது கிராம சேவகர் பிரிவுகளில் இதுவரை மலசல கூடம் இல்லாதவர்களுக்கும், வறுமை நிலையில் உள்ள குடும் பயனாளிகளுக்கும் குறிப்பிட்ட பகுதி கிராமசேவகர்களினால் சிபார்சு செய்யப்பட்டவர்கள் இதில் நன்மையடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மலசல கூடம் ஒரு அறையும், மூன்று குழியும் கொண்டதாக அமைவதுடன் சுகாதார திணைக்களத்தின் அனுமதியுடன் கட்டப்படவுள்ளது என பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் முரசுக்குத் தெரிவித்தார். (116)

# பள்ளத்தில் பாய்ந்தது பயணிகள் பேருந்து

(அராலி)



நேற்றுக் காலை 8 மணியளவில் குறிகாட்டுவானில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த 776 இலக்கப் பயணிகள் பேருந்து ஒன்று வேலணை அராலிச் சந்தி என்ற இடத்தில் வீதியை விட்டு விலகிப் பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

பேருந்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இப் பேருந்தில் பயணித்த பயணிகள் எவருக்கும் எவவித சேதங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(85)

# ஒரே இரவில் இரு திருட்டுக்கள்

(வேலணை)

வேலணை துறையூர் ஐயனார் ஆலயம் மற்றும் அதன் பூசகர் வீடு என்பவற்றில் ஒரே இரவில் இரு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மேற்படி திருட்டில், ஆலயப் பூசகர் வீட்டில் இரண்டரைப் பவுண் சங்கிலி ஒன்றும், இரண்டு கைத்தொலை பேசி மற்றும் ஐயாயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐயனார் ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டு அதில் உள்ள பணமும், மடப்பள்ளிக் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் சிதறடிக்கப்பட்டும் உள்ளன.

இச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (85)

# பாடசாலை திறப்பு விழா காரைநகரில் கோலாகலம்

காரைநகர் வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாசாலை 20 வருடங்களுக்குப் பின்னர் புனரமைக்கப்பட்டு இன்று சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் புதுப்பொலிவுடன் திறந்து வைக்கப்படவுள்ளது.

இப்பாடசாலை கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 20 வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த நிலையில் இவ்வாண்டின் . முற்பகுதியில் எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றிய நிலையில் இயங்க ஆரம்பித்தது.

எனினும் இப்பாடசாலை மாணவர்கள் கல்வியை சிரமமின்றிக் கற்கும் நோக்குடன் காரைநகர் கடற்படையினரால் பாடசாலையில் திருத்த வேலைகள் செய்து, வர்ணம் பூசி, மின் இணைப்பு வழங்கி சுற்றுவேலிகள் மற்றும் சிறுவர் விளையாட்டுத்திடல் அமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. (50)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

திருநெல்வேலியில் அமைந்துள்ள சங்கத் தலைமை அலுவலகத்தில் சங்கத் தலைவர் லயன்ஸ் பி.ஆர்.ரஞ்சன் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ள உள்ளார். (120)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
## வேலைக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைக்கு இக்ராட் (ICTAD) C9 ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக்காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 19-12-2011 - 27-12-2011 பி.ப. 2.00 மணி வரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 28-12-2011 நண்பகல் 12.00 மணி வரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி :- 28-12-2011 பி.ப. 2.00 மணி
(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
05. மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு தலைவர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, தலைமையலுவலகம், மானிப்பாய் என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
06. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

| இல: | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | ஏனைய வரி |
|---|---|---|---|---|
| 1 | மாதகல் காடாப்புலத்தில் புனரமைக்கும் கொல்களப் பகுதிக்கு சுற்றுமதில் புனரமைப்பு | 5000.00 | 1000.00 | 142.40 |

**திரு. அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்,**
**தவிசாளர்,**
**வலி.தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**
**16.12.2011**

(C/1519)

# மணியந்தோட்டம் கிராமத்தில் தொழில் உபகரணம் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

மணியந்தோட்டம் கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நல்லூர் கிராம அபிவிருத்தி சங்க பணிமனையில் நேற்று மாலை மேற்படி உபகரணங்கள் 410 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இதில் கோடரி, மண்வெட்டி, அலவாங்கு, கத்தி போன்ற கருவிகள் இதில் உள்ளடங்குகின்றன.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக் ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் மேற்குறித்த கருவிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும், நல்லூர் பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான அ.ரவீந்திரதாஸன், கிராமசேவகர் எம்.ஞானேந்திரன், நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சுரேந்திரநாதன் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# பேருந்து பயணிகளின் பொறுப்பற்ற செயற்பாடுகள்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - பரந்தன் சாலையில் புதுக்குடியிருப்பு நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றில் இருந்து அதன் யன்னல் ஊடாக வீசப்பட்ட பொலித்தீன் உறை மற்றும் வெற்றுத்தண்ணீர்ப் போத்தலால், சாலையில் பயணித்துக் கொண்டிருந்த துவிச்சக்கர வண்டி பயணி ஒருவர் மிகுந்த அஸௌகரியங்களுக்கு உள்ளாக வேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, புதுக்குடியிருப்பு - பரந்தன் சாலையில் காலை நேரம் புதுக்குடியிருப்பு நோக்கி வந்துகொண்டிருந்த மேற்படி தனியார் பேருந்திலிருந்து கழிவுப் பொருட்கள் அடங்கிய பொலித்தீன் தூக்கி வீசப்பட்டது. (138)

## இலங்கை மின்சார சபை - யாழ்ப்பாணம்
## மின்சாரக் கட்டண நிலுவைகளைச் செலுத்துதல் சகல மின் பாவனையாளர்களுக்கான அறிவித்தல்

யாழ்.குடாநாடு முழுவதும் உள்ள இலங்கை மின்சாரசபையின் பாவனையாளர்கள் (அரச மற்றும் தனியார்) தங்களது மின்சார நிலுவைகளை 23.12.2011க்கு முன்பாகச் செலுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். செலுத்த தவறும் பட்சத்தில் எந்தவித முன் அறிவித்தலும் இன்றி மின் துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

- ❒ மின்பாவனையாளர்களுக்கு வசதியாக மின்பட்டியல் பணம் செலுத்தப்பட்ட உடன் வரவு வைப்பதற்கு வசதியாக இல.500, கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள மின்சாரசபை அலுவலகத்திலும், மக்கள் வங்கி (ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி கிளைகளிலும்) அமைந்துள்ள எமது கருமபீடங்களில் பணத்தைச் செலுத்த முடியும்.
- ❒ மின்னிணைப்பு துண்டிக்கப்படும் பட்சத்தில் மீள மின்னிணைப்பு வழங்குவதற்கு மின்பட்டியல் நிலுவையுடன் மேலதிகமாக ரூபா 800.00 இனை மீளிணைப்புக் கட்டணமாக மின் சிட்டையில் செலுத்தப்பட வேண்டும்.

யாழ்.பிரதேச மின் பொறியியலாளர்
யாழ்ப்பாணம். (C/1520)


## அருள்ஞான ஜோதிடம்

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கப்போவது இவற்றுடன் எனது அருள் ஞான ஜாதகக் கணிப்பினால் மை வெளிச்சம் போல் உங்கள் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளலாம். அத்துடன் ஒருவர் என்னிடம் 4 ஜாதகங்களுக்கு மேல் கணிப்பு செய்து எடுத்தால் Gem Cooperation உத்தரவாதக் கடிதத்துடன் அவர்களுக்கு அதிஷ்டம் தரக்கூடிய அதிஷ்டக் கல்லை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.தேசப்பந்து, பேராசிரியர். P.K.சாமி J.P.ஐயா. ஸ்ரீ துர்க்காதேவி அருள் சக்தி இல்லம், இல. 23, மேபீல்ட் வீதி, கொழும்பு - 13. 011234263/64. (வீண் அலைச்சலை தவிர்க்க முன கூட்டியே அறிவித்து, அந்த நேரத்தில் மாத்திரம் வரவும். (C/1102)

உடல் வேதனையையும், உள்ள வேதனைகளையும் தாங்கிக் கொள்ளவே முடியாது என்று நாம் நினைக்கிறோம். ஆனால் உண்மையில் நம்முடைய உடல் உள்ள அமைப்புகள் ஏற்றுக்கொள்ளும் சக்த உடையதாக இருக்கிறது என்பதை யாரும் உணர்வதில்லை.

ஸ்ரீஅன்னை

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## நம்மையே நாம் கேட்டாக வேண்டும்!

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நேற்றைய தினம் நாடாளுமன்றில் அவை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வாவினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர் சொல்லிய ஒரு விடயம், இன நல்லிணக்கத்துக்கு மிக முக்கியமான அடிப்படையாக அமையும என்பதில் ஐயமில்லை. சிவில் நிர்வாகத்தில் தமது ஈடுபாட்டை பாதுகாப்புப் படையினர் விலக்கிக்கொள்வர், சமூக வாழ்வின் சகல அம்சங்களிலிருந்து பாதுகாப்புப் படையினர் வாபஸ் பெறப்படுவர் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அங்கு தெரிவித்தார்.

யுத்த வலயத்தில் அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச் சூட்டில் பொது மக்கள் கொல்லப்பட்டதை நல்லிணக்க ஆணைக்குழு ஒப்புக் கொண்டுள்ளது.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் போது அதிகாரத்தை துஷ்பிரயோகப்படுத்தி சட்டத்தை மீறியதான சம்பவங்களுக்கு சாட்சிகள் இருக்கும் பட்சத்தில் அவை குறித்து விசாரித்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும், ஆணைக்குழு கண்டறிந்திருக்கும் பிரச்சினைகள் குறித்துக் கவனமெடுத்து சரிசெய்து கொள்வதற்கு அரசு முன்வருவதைப் பாராட்டுவதன் மூலம் அதை ஊக்குவிப்பதில் தவறொன்றுமில்லை. எதிர்மறையாகவே பேசி, எதுவும் நடைபெறாமல் செய்வதைவிட நம்பிக்கை மூலம் எதையாவது சாதிக்க முடிவதில் நமது மக்களுக்கு நன்மையே உண்டாகும் என்பதில் நம்பிக்கை கொள்வோம்.

தவறுகள் நடந்ததை ஒப்புக்கொள்வதும், அவற்றுக்கான பிராயச்சித்த நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதுமே இனங்களுக்கிடையே உருவாகிவிட்டிருக்கும் கசப்புகளை அகற்றும் வழியாகும். இரு பக்கமிருந்தும் அதற்கான இணக்கங்கள் காண்பிக்கப்பட வேண்டும்.

நல்லிணக்கம் உருவாக வேண்டும் என்று விருப்பப்படுகிறவர்கள் – அவர்கள் எந்தத் தரப்பினராயிருந்தாலும் – நடைபெற்று முடிந்த தவறுகளிலெல்லாம் தாங்கள் நேரடியாகப் பங்குபெற்றிருக்காவிட்டாலும், அவற்றுக்காகப் பரஸ்பரம் மன்னிப்பைப் பெற்றுக் கொள்வது முக்கியமாகும். மற்றவர் தவறுகளைச் சுட்டிக் காட்டிக் கொணடிருப்பதற்குப் பதிலாக முதலில் அவரவர் தத்தம் தரப்பிலுள்ள தவறுகளை எடுத்துச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொள்ள முன்வருதல் வேண்டும். அதுவே நல்லிணக்கத்திற்கான வழியாக அமையும். இதில் பெரிய குற்றவாளிகள் சிறிய குற்றவாளிகள், முதலில் யார் வர வேண்டும், யாருக்குக் கூடுதல் பொறுப்பு என்று யோசிப்பது கூட, வழியை முடக்குவதாகிவிடும்.

நாம் நேரிடையாகச் செய்யாத குற்றங்களுக்கு நாம் பொறுப்பில்லை என்று இருந்துவிட முடியாது. குற்றம் நடந்தபோது கண்டிக்காமல் இருந்தது, அல்லது அவற்றை அறிந்துகொள்ளாமல் இருந்தது, அவையெல்லாம் நம் விடுதலைக்கும் சுதந்திரத்திற்குமாகச் செய்யப்படும் அவசியங்கள் என்று விபரிக்கப்படுவதை மறுத்துப் பேசாமலிருந்தது கூட எல்லாமே குற்றத்திற்கு உடந்தையாக இருந்தமைதான் என்று புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

கொலைகள், அழிவுகள் எல்லாவற்றையும் அற–அழிப்பு, நியாயமிழப்பு, மனித அவலம், சமூகச் சிதைவு என்ற நிலையில் எல்லாவற்றுக்கும் நம் தரப்பிலும் காரணங்களை ஏற்றுக்கொண்டு, அங்கீகரித்துக்கொண்டு வருத்தத்தைப் பகிர வேண்டியிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் முன்கையெடுப்பதில் இழிவொன்றுமில்லை. மற்றவர்களையும் அதுபோல் நடக்கத்தூண்டும், வெட்கவுணர்வை வெளிக்கொணரும் முன்னுதாரணமாக அது அமையும்.

வெற்று வசனங்கள் கேட்டு, 'வீரநினைவு'களிலேயே மூழ்கிக் கிடந்தால், உரிமைகள் பலவற்றையும் மேலும் மேலும் இழந்துகொண்டிருப்பதை நாம் தடுக்கப்போவதில்லை. நம் பம்மாத்து முழக்கங்கள், இன்னுமின்னும் இழப்பதற்கான வாய்ப்புகளையே ஏற்படுத்தித் தந்துகொண்டிருப்பதை நாம் உணரவில்லையா?

நாம் வாயிலும் வயிற்றிலுமடித்து முழங்கிக் கொண்டிருக்கிற நம் பிரச்சினைகளை வேறு யாரும் வந்து தீர்க்க முடியாது. என்ன செய்யவேண்டும் என்று நம்மையேதான் நாம் கேட்டாக வேண்டும்.

- ஆசிரியர் -

# தீர்வு விடயத்தில் முஸ்லிம்களின் சம்மதம் இன்றி இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கமாட்டோம்

## ஹக்கீமிடம் சம்பந்தன் உறுதியளிப்பு

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் முஸ்லிம்களின் கருத்தொருமைப்பாடின்றி எந்தவொரு இறுதித் தீர்மானத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளாது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், முஸ்லிம் காங்கிரஸிடம் உறுதியளித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் பிற்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. இச்சந்திப்பின்போது இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகளின் விவரங்களைப் பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் விளக்கிக் கூறினார்.

அரசுடனான கடந்த சில சந்திப்புகளின்போது இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமான அதிமுக்கிய விடயங்களான பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம்,வடக்கு,கிழக்கு இணைப்பு சம்பந்தமாகப் பேசப்பட்டதையும் அவர் விளக்கிக் கூறினார்.

அடிப்படையில் முக்கியமான விடயங்கள் சம்பந்தமாக முஸ்லிம்களின் கருத்து ஒருமைப்பாடு இன்றி எந்தவொரு இறுதித் தீர்மானத்தையும் தமது தரப்பினர் மேற்கொள்ளப்போவதில்லை என சம்பந்தன் உறுதியளித்தார்.

சம்பந்தன், முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப்பின் அரசியல் வரலாற்றைத் தொட்டுக் காட்டியதுடன் தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் தமிழ் மக்களோடு ஒன்றித்து மேற்கொண்ட அரசியல் பயணத்தையும் சுட்டிக்காட்டினார்.

அதன் அடிப்படையில் மீண்டும் தமிழ்பேசும் தமிழ், முஸ்லிம் மக்கள் அரசியல் தீர்வுக்காக ஒன்றாகச் சேர்ந்து ஜனநாயக ரீதியாக தங்களது உரிமைகளை பெற்றுக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உருவாகியுள்ளது பற்றியும் அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் கருத்துத் தெரிவிக்கும்போது தொடர்ச்சியாக இதுபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் சந்தித்து கலந்துரையாடுவதற்கான பொறிமுறை ஏற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இடையிலான சுமுகமான உறவை முன்னெடுக்கும் விதத்தில் முஸ்லிம்களின் உணர்வுகள் பாதிக்கப்படாதவாறு தமிழர் தரப்பினருடைய அறிக்கைகள் அமைய வேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

ஆகவே, எதிர்காலத்தில் இதுபோன்ற பேச்சுகளை நடத்த வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கல்முனை பிரதி மேயர் நிசாம் காரியப்பர் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வர் எனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பேச்சில் கூட்டமைப்பு சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ரி.ஹசனலி, பைஸல் காசிம், முத்தலிப் பாவா பாரூக், கல்முனை பிரதி மேயர் நிசாம் காரியப்பர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# மனநல நோயை தடுப்பதற்கு விழிப்புணர்வு பிரசார நடவடிக்கை

(கொழும்பு)

மனநோயாளர்களுக்கு மனநல நிபுணத்துவ மருத்துவ சேவையை வழங்குவதற்காக இலங்கை மனநோய் வைத்தியக் கல்லூரியும் சுகாதார அமைச்சும் மனநல விழிப்புணர்வை ஏற்படுத்தும் பிரச்சாரப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.

நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு நீண்டகாலத் தடையாக இருந்துவந்த மனநலம் தொடர்பான பிழையான எண்ணக்கருக்களை இந்த விழிப்புணர்வு பிரசாரம் தகர்க்கும் என மனநோய் வைத்தியக் கல்லூரியின் தலைவர் டாக்டர் உசா குணவர்தன தெரிவித்தார்.

இலங்கையில் மனநோயாளர்களை குணப்படுத்துவதற்கான வழங்கலும் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான சகல வசதிகளும் காணப்படுகின்றன உலக சனத்தொகையில் 10 வீதத்திற்கும் அதிகமானோர் மனநல பிரச்சின்னயால் பாதிக்கப்படுகின்றனர். இந்த விழிப்புணர்வு பிரசாரத்தின் ஊடாக நோயாளர்கள் மூடப்பட்ட கதவிற்குள் மறைந்திருந்து கஷ்டப்படத் தேவையில்லை. இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்திலும் மனநலக் குறைபாடுகளைக் கையாளும் சிறந்த வைத்தியர்கள் சேவை செய்வதற் காகக் காத்திருக்கின்றனர். எனவே நோயாளி எவ்வளவு விரைவாக மனநலச் சேவையை நாடுகின்றாரோ அவ்வளவு விரைவாகவும் சிறப்பாகவும் நோயிலிருந்து மீள்வதற்கான வாய்ப்புகள் உள்ளது.

தேசிய மனநல நிலையமாக இயங்கிவரும் அங்கொட வைத்தியசாலை மனநோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் சிறந்த மையமாக விளங்கி வருதுடன் உலகத்தரம்மிக்க நிறுவனத்திற்கு இணையாக உள்ளது. இதேவேளை சகல மாவட்டங்களிலும் உள்ள போதனா அல்லது மாவட்ட பொது வைத்தியசாலைகளில் மனநல சுகாதார நிபுணர்களையும் மனநல வசதிகளையும் கொண்ட விசேட மனநல பிரிவொன்றை ஆரம்பிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வுள்ளது. எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வட,கிழக்கில் சுயாட்சியை நிறுவ அரசசார்பற்ற நிறுவனங்கள் முயற்சி

## சிங்கள ஊடகம் தகவல்

வடக்கு,கிழக்கில் சுயாட்சியை நிறுவுவதற்கு சில அரசசார்பற்ற நிறுவனங்கள் முயற்சி செய்து வருவதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கிற்கு சுயாட்சி அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கு மாறு குறித்த அரச சார்பற்ற நிறுவனங்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் எழுத்து மூலம் கோரியுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் உதயன் விடுதியில் வைத்து இது தொடர்பான எழுத்து மூல மகஜர், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த மகஜரில் 75 அரச சார்பற்ற நிறுவன செயற்பாட்டாளர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்த நிலையில், நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்தும் நோக்கில் இந்த மகஜர் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அந்த சிங்கள பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. இதேவேளை, இந்த ஆவணத்தை தயாரித்தவர்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தகவல்களைத் திரட்டியுள்ளனர்.

13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென மகஜரில் கோரப்பட்டுள்ளது. இதேவேளை, புலி ஆதரவு ஊடகங்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் நிகழ்ச்சி நிரலை குழப்புவதாக மாவை சேனாதிராஜா குற்றம் சுமத்தியிருந்தார் என்றும் அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## மானிய விலையில் உர விநியோகம்

(கரணவாய்)

கரவெட்டி கமநல சேவை நிலையத்தினால் விவசாயிகளுக்கு மானிய விலையில் 3ஆம் கட்டமாக உரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதில் கரணவாய், கரணவாய் தெற்கு, கரவெட்டி, கப்பூது, அந்தணதிடல், உடுப்பிட்டி, நவிண்டில் ஆகிய பிரதேச விவசாயிகள் கமநல சேவைத் திணைக்களத்தில் விவசாய சம்மேளனங்களூடாக உரத்தைப்பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இப்பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு உரம் குறிப்பிடப்பட்ட திகதிகளில் வழங்கப்படும் என கமநல சேவை திணைக்கள உத்தியோகஸ்தர் தெரிவித்துள்ளார். (18)

# கிளிநொச்சி மத்திய கல்லூரியில் புதிய கட்டடம் திறந்துவைப்பு

(கிளிநொச்சி)

கல்வி சார்ந்த செயற்பாடுகளை அரசியல் நோக்கோடு பார்க்கின்ற நிலைமை மாற்றம் பெறவேண்டும். அதோடு மாணவ சமுதாயத்தை அரசியல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதையும் நாம் வன்மையாக எதிர்க்கின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

ஐம்பது இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கிளி/ மத்திய கல்லூரிக் கட்டடத்தினை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

நீண்ட கால யுத்தம் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித்துறையை மிகவும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளியுள்ளது.

இந் நிலையை மாற்றி அமைக்க வேண்டியதும் மீண்டும் எமது சமூகத்தைக் கல்வியியல் ரீதியாக உயர்வான நிலைக்குக் கொண்டுவரவேண்டியதுமான வரலாற்றுப் பொறுப்பு எங்கள் அனைவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை ஓரிரு அரசியல்வாதிகளால் மட்டும் நிறைவேற்றிவிட முடியாது. ஒட்டு மொத்தச் சமூகமும் இதற்காக உழைக்கவேண்டும்.

அத்தோடு கல்வி சார்ந்த செயற்பாடுகளை அரசியல் நோக்கில் பார்க்கின்ற நிலைமையும் மாற்றம் பெறவேண்டும். மாணவ சமுதாயத்தை அரசியலில் ஈடுபடுத்தி அவர்களின் எதிர்காலத்தையும் சீர்குலைக்க முனைகின்ற செயற்பாடுகள் மிகவும் கண்டிக்கப்பட வேண்டியவை.

இன்று இம்மாவட்டத்தில் கல்வித்துறை வளர்ச்சியடைந்து வருகின்றதென்பதை மாணவர்களின் பல்வேறு வகையான பெறுபேறுகள் எடுத்துக் காட்டுகின்றன. இவை நாம் மீண்டும் கல்வியின் உச்சத்தை எட்ட முடியும் என்ற நம்பிக்கை எம்முன் உருவாக்கியுள்ளது. மேலும் இம் மாவட்டத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் மேலாக கல்வி சார் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு நாம் மிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம் என மேலும் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் மு. ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கல்லூரியில் புனரமைக்கப்பட்ட விஞ்ஞானஆய்வுகூடம் மற்றும் வகுப்பறைத் தொகுதி என்பன திறந்து வைக்கப்பட்டன. இதில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேல், மற்றும் கல்வித் துறைசார்ந்த அதிகாரிகளும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன். கல்லூரி அபிவிருத்திச்சங்கத்தின் செயலாளர் கபிரியல் மற்றும் உறுப்பினர்களும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## நல்லூர் பிரதேச அபிவிருத்திப் பணிகளுக்கு ஒரு கோடி 30 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபையினால் பல அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருத்தியமைக்கப்பட்ட குறைநிரப்பு வரவு - செலவுத் திட்டத்தில், வறுமைக் கோட்டுக்குட்பட்ட நலிவுற்ற குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள், மின் விளக்குப் பொருத்துதல், சனசமூக நிலைய மற்றும் மயானப் புனரமைப்பு, வீதித் திருத்தம், சந்தை மதில் கட்டுதல் போன்ற மற்றும் பல வேலைகளுக்காக ஒரு கோடியே முப்பது இலட்சத்து மும்பதாயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு மைதானம் ஒன்றை திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைப்பதற்கான காணிக் கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்ட அறுபத்தைந்து இலட்சம் ரூபா நிதியும் இவற்றுள் அடங்குகிறது.

இதுதவிர நெல்சிப் திட்டத்தின் கீழ் கலாசார மண்டபம் மற்றும் பயிற்சி மண்டபம் நிறுவுவதற்காக நாற்பத்து நான்கு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேச சபைக்கு அருகாமையிலுள்ள சபைக்குச் சொந்தமான காணியில் இம்மூன்று மாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (137)

## ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தினால் புதிய கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தினால் நடத்தப்படும் இதழியல் டிப்ளோமா (முழுநேரம் இரண்டு ஆண்டுகள்) புதிய கற்கை நெறிக்கு (2012/2014) தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்குரிய கல்வித் தகைமையாக க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும். இப்பயிற்சி அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம், இணைய ஊடகம் ஆகிய துறைகளில் வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு, வானொலி மற்றும் ரி.வி. நிகழ்ச்சிகள் தயாரித்தல், ஊடக நிறுவனங்களில் செயன்முறைப் பயிற்சி சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும். செயன்முறைப் பயிற்சிகள் ஆவணப்படத் தயாரிப்பு ஆகிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

விண்ணப்பதாரிகள் எழுத்துத் தேர்வும் (எழுத்து, ஆற்றல், அறிக்கையிடும் திறன் மொழியாற்றல், சமூக அறிவு) மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு செய்யப்படுவர்.

கற்கை நெறிக் கட்டணமாக 22ஆயிரத்து 500 ரூபா அறவிடப்படுவதுடன் விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை இல,84 ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் 100 ரூபா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மேற்படி முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை அறிய 0212229878 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (உ)

# பேருந்தில் பயணம் செய்வதற்கு தயக்கம் காட்டும் பெண்கள்

(யாழ்ப்பாணம்)

பேருந்தில் பயணம்செய்ய தயக்கமாக இருப்பதாக பேருந்தில் தினமும் பயணிக்கும் பெண பயணிகள் தெரிவிக்கின்றனர்.

பேருந்து நிலையத்தில் பேருநதுக்காக காத்திருக்கும் சந்தர்ப்பத்தில் மட்டுமன்றி பேருந்துகளிலும் பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகுவதனாலேயே பேருந்தில் பயணம் செய்ய அச்சமாக இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

பேருந்தில் அதிக பயணிகள் காணப்படும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் சில ஆண்கள் பெண்களின் மேல் சாய்வது, காலால் தட்டுவது போன்ற சேஷ்டை விடுவதாக நாவற்குழியில் இருந்து தினமும் யாழ்ப்பாணம் வந்து செல்லும் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

தள்ளி நிற்கும் படி கூறினால் 'தனியே ஒரு வாகனத்தை பிடிச்சு வரலாமே', 'பஸ் என்டா நெரிபட்டுத்தான் போகோனும்' என ஆணவத்துடன் பதிலளிப்பதாகவும் அவர் கூறினார்.

ஒருசில ஆண்களின் இவ்வாறான செயற்பாடுகள் எல்லா ஆண்களுக்கும் அவப் பெயரை உருவாக்குகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். பிள்ளைக்குப் பால்மா வாங்க என்றும், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர் என்றும், அநாதை என்றும் கூறிக்கொண்டு, பேருந்துத் தரிப்பிடத்தில் மட்டுமல்லாது பேருந்துகளுக்குள்ளும் ஒருவர் மாறி ஒருவராக பயணிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர். இவர்களில் சிலர் பெண்களிடம் சேஷ்டை விடுவதாக பிரயாணிகள் தெரிவிக்கின்றனர். 'இவங்களெல்லாம் குடிக்கிறதுக்காக பொய்சொல்லி காசை வாங்கிறாங்கள்' எனத் திட்டினார் 10 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றும் பேருந்துச் சாரதி ஒருவர்.

பல்வேறு காரணங்களைக் கூறி வாங்கும் பணத்தை இந்தப் பிச்சைக்காரர்கள் மது வாங்குவதற்காகவே பயன்படுத்துகின்றனர் என்றும், குடித்துவிட்டு மதுபோதையில் பெண்கள் மீது விழுவது, காசு வாங்கும் சாட்டில் கையைப் பிடிப்பது, காலால் தட்டுவது, தகாத வார்த்தைகள் பேசுவது, அவர்களிடையே முரண்படுது என இவர்களின் செயற்பாடுகளை பல தடவைகள் நேரில் கண்டதாகவும் அவர் கூறினார். வேலைக்குச் செல்பவர்கள் மட்டுமன்றி பாடசாலை மாணவர்களிடமும் இந்தப் பிச்சைக்காரர்கள் பிச்சை கேட்டு தொந்தரவு செய்கின்றமையை அவதானிக்ககூடியதாக உள்ளது. இவ்வாறு பலருக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் பிச்சைக்காரர் கள் பேருந்துகளில் ஏறி பிச்சை எடுப்பதை போக்குவரத்து சபை தடுக்கவேண்டும் எனப் பொது மக்கள் கேட்டுக்கொண்டனர். (செய்தி : ஜெயந்தி, சிகரம் ஊடக இல்ல மாணவி)


## கட்டாக்காலி நாய்களின் தொல்லை

(அளவெட்டி)

வலி வடக்குப் பிரதேசத்தில் அதிகரித்துள்ள கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் தாம் அசௌகரியங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர். குறிப்பாக தெல்லிப்பளை, துர்க்கையம்மன் ஆலயம், பஸ்தரிப்பிடம், வைத்திய சாலை, பிரதேச செயலகம் ஆகிய பகுதி களிலேயே கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகமாகக் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வாகன சாரதிகள் மற்றும் வீதியால் பயணிப்போர் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் நாய்களும் வாகனங்களில் சிக்கி இறக்கும் நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

கட்டாக்காலி நாய்களின் தொல்லையை நீக்க சம்பந்தப்பட்ட பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதிப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (93)



புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழான சமுதாய சீர்திருத்தத் திணைக்கள சாவகச்சேரி கிளை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர கிளையை நாடா வெட்டி திறந்து வைப்பதையும் காணலாம். (11)

# அடிப்படை வசதிகள் இன்றி இயங்கும் அளவெட்டி ஆதார வைத்தியசாலை

(அளவெட்டி)

அளவெட்டி ஆதார வைத்தியசாலையில் அடிப்படை வசதி வாய்ப்புக்கள் இல்லாததால் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் நாளாந்த தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

இவ் வைத்தியசாலைக்கு தினமும் 250 - 300 வரையான நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக வரும் நிலையில் வசதிகள் இல்லாமல் நோயாளர்கள் தாம் சிகிச்சையை பெறமுடியாது திரும்பி செல்லும் அவல நிலை காணப்படுவதாக கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இவ் வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவரே கடமையாற்றுவதாகவும் அவர் தவிர்க்க முடியாத காரணங்களால் வராது விட்டால் சிகிச்சைகள் வழங்கப்படாது நோயாளர்கள் சிரமப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை இவ் வைத்தியசாலையில் தங்குமிட வசதிகள் மற்றும் அம்புலன்ஸ், வாகனத் தரிப்பிடம், ஏனைய ஆளனியினர் பற்றாக்குறை என்பனவும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அவசர நோயாளர்களாக வருபவர்களுக்கு சிகிச்சையளிக்க முடியாத நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதை விட இவ்வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளதுடன் குறிப்பாக பனடோல் மருந்துகூட வெளியிடத்தில் விலைக்கு வாங்கியே நோயாளர்களுக்கு வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சிறுவர்கள்,குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்கள் ஆகியோர் சிகிச்சையை பெற்றுக்கொள்ள முடியாது சிரமங்களை எதிர்நோக்குவதாகவும்வைத்தியர் பற்றாக் குறையால் வேறு வைத்தியசாலைக்கு சென்றே சிகிச்சையை பெறவேண்டியுள்ளதாக நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்களின் மருத்துவ தேவையை கருத்திற்கொண்டு இவ் வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு இப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (93)

## புதிய நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாண கிராமசேவையாளர்களின் தொழிற்சங்கக் கூட்டம் கொழும் பில் இடம்பெற்றபோது பின் வருவோர் புதிய நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் என்.நவரத்தின ராசா (யாழ்மாவட்டம்), உபதலைவர் ஞ.ஆர். நிஜாமுதீன் (திருகோணமலை மாவட்டம்), செயலாளர்.எஸ். ஞ.பெர்னாண்டோ (மன்னார்மாவட்டம்), இணைச் செயலாளர்- ஆர். ஸ்ரீகந்தராசா ( மட்டக்களப்பு மாவட்டம்), பொருளாளர் - என். நஸீர் (அம்பாறை மாவட்டம்), கணக்காய்வாளர்- ஜேசுதவராசா (திருகோணமலை மாவட்டம்)

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எம்.கோமேஸ்வரன் ( மட்டக்களப்பு) கோ. விஜயரட்ணம் (வவுனியா), வை.சந்திரசேகரம் (மன்னார்) ஆர். ஒளித்திலகன்-(முல்லைத்தீவு) கே.மகேந்திரன் (கிளிநொச்சி), வீ.கே.சண்முகநாதன் - (யாழ்ப்பாணம்), எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா -(யாழ்ப்பாணம்), ஆர்.அருந்தவச்செல்வன்-(திருகோணமலை), கே.குருநாதப்பிள்ளை (மட்டக்களப்பு) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(17.12.2011–சனிக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
மார்கழி -01 ஆம் நாள்.
இராகுகாலம் 9.22-10.52, சுபநேரம் 3.22 -4.52 வரை
நட்சத்திரம்: பூரம் மு.இ . 7.58 வரை
திதி: ஸப்தமி பி.ப. 4.59 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:- பணக்கஷ்டம், அதிகாரப்போட்டி, நினைத்ததைச் சாதித்தல், தேகம் சுகம், தெருவிபத்து.

ரிஷபம:-சுற்றத்தார் ஆதரவு, பணக் கஷ்டம், நண்பர் வருகை, சகோதரர் உதவி, தேகம் பலவீனம்.

மிதுனம் :-பணக் கஷ்டம், குடும்பத்தில் சலனம் அதிகாரப் பகிர்வு, திடீர்பயணம், தேகம் சுகம்.

கடகம்:- குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், சுற்றத்தார் ஆதரவு, இனசன அழைப்பு, தேகம் பலவீனம்.

சிம்மம்:- பணக்கஷ்டம், தேவையற்ற பயணம், வீண் அலைச்சல், தேகம் சுகம், தெருவிபத்து வரலாம்.

கனனி :- குடும்பத்தில் சபலம், பணக் கஷ்டம், சுற்றாத்தார் ஆதரவு, தேகப் பலவீனம் வீண் வாக்குவாதம்.

துலாம் :-பணக் கஷ்டம், சுற்றத்தார் ஆதரவு, தேவையற்ற பயணம், வீண் சண்டை, தேகம் சுகம்.

விருச்சிகம்-குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், வீண் வாக்குவாதம், தேகம் சுகம், விபத்து வரலாம்.

தனுசு:- பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, தேவையற்ற பேச்சு, வீண் வதந்தி, தேகம் சுகம்.

மகரம:- குடும்பத்தில் கவலை, பணக்கஷ்டம், நினைத்ததைச் சாதித்தல், திடீர்பயணம், தேகம் சுகம்.

கும்பம் :- பணக்கஷ்டம், வீண் அலைச்சல், காரியத்தடை, தொழில் மந்தம், தேகம் பலவீனம்.

மீனம் :- குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், காரியத்டை, சுற்றத்தார் ஆதரவு, தேகம் சுகம்.

## நெடுங்கேணி பிரதேசத்தில் முதியோர் சங்க நிகழ்வு



(வவுனியா)

கெல்பேஜ் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் நெடுங்கேணி முதியோர் சங்க விசேட நிகழ்வு நெடுங்கேணி வடக்கு பொது நோக்கு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

முதியோர் எதிர்நோக்கும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட இந்நிகழ்வில் பிள்ளைகளுடன் முதியோர் வாழ்தல் தொடர்பாகவும் கருத்தாடல் இடம்பெற்றது.

கெல்பேஜ் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் மாவட்டப் பொறுப்பதிகாரி இந்திரா திலகவர்த்தன தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முதியோர்கள் கௌரவிப்பும், அவர்கள் சமூகத்திற்காற்றிய சேவைகளுக்காக பரிசில்களும் வழங்கப்பட்டது.

இதன்போது நெடுங்கேணி வடக்கு முதியோர் சங்கத்தலைவர் சு. பாக்கியராசா, நெடுங்கேணி வடக்கு கிராமசேவையாளர், முன்னாள் வவுனியா நகரசபைத்தலைவர் ஜி.ரி. லிங்கநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (125)

## கடற்றொழிலாளர் கூ.சங்கங்கள் ஆயுட்காலம் இரண்டு வருடங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு அமைப்புக்களின் பணிப்பாளர் சபையின் ஆயுட்காலம் இரண்டு வருடங்களாக வரையறுக்கப்பட்டிருப்பதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரை மேற்கோள்காட்டி யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ. ரவீந்திரன் தெரிவித்துள்ளார். எற்கனவே கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சபைக்கு ஒரு வருட ஆயுட்காலமும், சமாசம் மற்றும் சம்மேளனத்தின் பணிப்பாளர் சபைக்கு முன்று வருடங்களாகவும் ஆயுட்காலம் இருந்து வந்தது. அந்தநடைமுறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள் மற்றும் சம்மேளனங்கள் ஆகியவற்றின் பணிப்பாளர்சபைக்கு இரண்டு வருடங்கள் அயுட்காலம் எனவும் வரையறுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாதத்திற்குள் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சமாசம் மற்றும் சம்மேளனம் ஆகியவற்றின் 2012 ஆம் ஆண்டிற்கான புதிய பணிப்பாளர்சபையின் தெரிவுகளை முடிக்குமாறும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் பணித்திருப்பதாகவும் தெரியவருகின்றது. (பா)


## வெள்ள நீர் வாய்க்காலை துப்புரவாக்கும் செயற்பாடு



(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஜமுனா வீதி வெள்ள நீர் வாய்க்காலை துப்பரவு செய்யும் பணிகள் யாழ்.மாநகரசபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் பருவ மழையினால் நகரின் பல பகுதிகளில் மழை நீர் வழிந்தோட முடியாமல் வாய்க்கால்களில் நீர்தேங்கிக் காணப்பட்டது.

இவ்வாறு ஜமுனா வீதி வாய்க்காலில் நிரம்பிய வெள்ளநீர் மக்களின் வீடுகளுக்குள் புகுந்து அவர்கள் குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனை யாழ் மாநகர முதல்வர் யோகேஸவரி பற்குணராசா நேரடியாகச் சென்று அவதானித்து வீடுகளுக்கு முன்தேங்கி நிற்கும் நீரை பக்கோ இயந்திரம் மூலம் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மராமத்துப் பகுதியினருக்கு பணிப்புரை வழங்கினார் இதனை அடுத்து மேற்படி பகுதியினரால் இந்நடவடிக்கை முக்னெடுக்கப்பட்டுள்ளது.



## பாமர் சங்கமம்

குடாநாட்டில் பரவலாக வீதி ஓரங்களிலும், வீதிகளை மறித்தும் சிறுவர், இளைஞர் கூடி நின்று பேணி எறிதல், பந்தடித்தலில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். இப்ப பள்ளிக்கூட விடுமுறை தினங்களில் அதைச் சொல்லி மாளாது. பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது எண்டது போலதான்.

விளையாடும் பந்து, பேணி போன்ற பொருட்கள் வீசப்பட்டு வீதியில் போபவர்களைக் காயப்படுத்தலாம் அல்லது வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள யன்னல் கண்ணாடிகள் நொருங்கிப் போகலாம்.

அதனால் சிறிய வாய்த்தர்க்கம் வளர்ந்து பாரிய அடி தடி என்று போய் பொலிஸ் என்றும் அலையலாம். இன்னும் சில சமயங்களில் கொலை கூட ஏற்பட்டு நீதிமன்றம், சிறைச்சாலை என்றும் திரிய நேரிடலாம்.

'சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது' என்பர். இந்த விழிப்புணர்வை பத்திரிகைகளில் செய்தியாகப் போட்டு ஏற்படுத்த முற்பட்டால் பத்திரிகைக் காரியாலயத்தை முற்றுகை இடுவதும் உண்டு.

உப்புடித்தான் இளைஞர் சிலர் வந்தார்கள். அந்தச் செய்தியை எழுதினது யார்? போட்டது யார்?

ஏன் அந்தச் செய்தி பொய்யானதா என்று கேட்கப்பட்டதும் பொய்யில்லை என்று ஒப்புக்கொண்டனர். ஆயினும் தாங்கள் விளையாடி எந்தப் பொருட்களோ, நபர்களோ பாதிக்கப்பட வில்லை என்றும் தெரிவித்தனர்

இதுவரை பாதிப்பு, சேதங்கள் எதுவும் நடைபெறாமல் இருக்கலாம். இனிமேல் ஏற்பட்டு அதன் பின் விளைவுகள் பாரதூரமாக அமைந்தால் குற்றமல்லவா?

வீதிகள் போக்கு வரவுக்கானவை அவற்றில் இத்தகைய விளையாட்டுகளில் ஈடுபடுவதே சட்ட விரோதமான ஒன்று எனச் சுட்டிக்காட்டியதும் தமக்கு விளையாட்டு மைதானம் ஒன்றில்லை எனத் தெரிவித்தார்கள்.

விளையாட்டு மைதானம் ஒவ்வொரு குடியிருப்புகளுக்கும் உருவாக்கக் கூடிய ஒன்றா ? குடியிருப்புக்கே நெருக்கடியான இக் காலத்தில்!

குடியிருக்க இடம் தாருங்கள் வீடுகள் அமைச்சுத் தாருங்கள் என்று கட்டுப்பாடு போட்டு கெஞ்சும் கூட்டம். கொஞ்சக் காலம் போனால் அவர்களால் உருவாகும் இளைய தலைமுறை விளையாட்டு மைதானம் கேட்கின்றது.

'இருக்கக் கொஞ்சமிடம் கொடுத்தால் போதும் படுக்கப் பாய் கேட்கும் காலம், என்ற பாடலில் சொல்லப்பட்டது போல்' இல்லையா?

உங்கடை அந்தக் குறைகளை மகஜராக எழுதித் தாங்க அதனையும் நாங்க செய்தியாகப் போடுறம் எண்டதைத் தவிர வேறு என்னதான் செய்யமுடியும்?

இதுகளெல்லாம் இல்லாமல் போகாது. மனித சமுதாயம் உள்ளவரை நீடித்துக் கொண்டேதான் இருக்கும் பாருங்கோ! 'பொறுத்தார் பூமி ஆள்வார், இல்லையே பின்ன...

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

**21.12.2011 - 16.12.2014** ஜோதிடமாமணி முருகு பாலமுருகன்



## சிம்மம்

மகம், பூரம், உத்திரம்
7ஆம் பாதம்

எந்தக் காரியத்திலும் தைரியமாகச் செயற்பட்டு பல வெற்றிகளைப் பெறக்கூடிய ஆற்றல் கொண்ட சிம்ம ராசி நேயர்களே! இதுவரை உங்களுக்கு நடைபெற்று வந்த ஏழரைச்சனியால் பல வகையில் துன்பங்களையும், அவமானங்களையும் சந்தித்து வந்தீர்கள். வரும் 21-12-2011இல் ஏற்படவிருக்கும் சனி மாற்றத்தின் மூலம் 16-12-2014 வரை சனி பகவான் உங்கள் ஜென்ம ராசிக்கு முயற்சி ஸ்தானமான 3ஆம் வீட்டில் சஞ்சரிக்கவுள்ளார். இது உங்களுக்கு வாழ்வில் மறுமலர்ச்சியை உண்டாக்கக்கூடிய அமைப்பாகும். நீங்கள் பட்ட துயரங்கள் வேதனைகள் யாவும் கானல் நீர் போல் மறையும். வாழ்க்கையும் சூரியனைக் கண்ட தாமரையைப் போல மலரும். எடுக்கும் காரியங்கள் அனைத்திலும் வெற்றிமேல் வெற்றிகளைப் பெறுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி, பூரிப்பு, சுபகாரியங்கள் கைகூடும். வாய்ப்பு, பொருளாதார ரீதியாக உயர்வு போன்ற யாவும் உண்டாகும். பண வரவுகள் சிறப்பாக அமைந்து பூமி மனை சேர்க்கை, பொன், பொருள் சேர்க்கை, கடன்கள் இல்லாத கண்ணியமான வாழ்வு அமையும். உற்றார், உறவினர்களின் ஆதரவும் அற்புதமாக இருக்கும். சனி 3இல் சஞ்சரிக்கும் இக்காலங்களில் 17-05-2012 வரை குருபகவானும் பாக்கிய ஸ்தானமான 9ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதும் சாதகமான அமைப்பாகும். நீங்கள் நினைத்த தெல்லாம் நிறைவேறும் புத்திர வழியில் மகிழ்ச்சிதரக் கூடிய சம்பவங்கள் நடைபெறும். பூர்வீகச் சொத்துகளாலும் இலாபம் அமையும். 17-05-2012 முதல் 28-05-2013 வரை குரு ஜீவன ஸ்தானமான 10ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதால் தொழில் உத்தியோக ரீதியாக சிறிசிறு நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும். என்றாலும் சனி சாதகமாக இருப்பதால் எதையும் சமாளித்து விடுவீர்கள். 28-05-2013 முதல் 13-06-2014 வரை குரு இலாப ஸ்தானமான 11ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பது அற்புதமான அமைப்பாகும். இக்காலங்களில் நீங்கள் தொட்டதெல்லாம். பொன்னாகும். பணம் வல வழிகளில் தேடி வரும் ஷேர் ஸ்குலேஷன் லாட்டரி போன்றவற்றாலும் எதிர்பாராத தன வரவுகள் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி பொறாமைகள் அனைத்தும் விலகி நல்ல இலாபத்தை அடைவீர்கள். பணம் கொடுக்கல் வாங்கலும் சரளமாக நடைபெறும்.

### தேக ஆரோக்கியம்

உடல் ஆரோக்கியமானது. அற்புதமாக அமையும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பாதிப்புகள் கூடி படிப்படியாக குணமடையும். எதிரிகளின் பலம் குறைந்து உங்களின் பலமும் வலிமையும் கூடும். எடுக்கும் காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிக்கக்கூடிய ஆற்றலையும் பெறுவீர்கள். குடும்பத்திலுள்ளவர்களும் நலமாக இருப்பார்கள்.

### குடும்ப பொருளாதார நிலை

குடும்பத்திலிருந்த கருத்து வேறுபாடுகள் பிரச்சினைகள் போன்ற யாவும் விலகி ஒற்றுமையும் சுபீட்சமும் உண்டாகும். நீங்கள் நினைத்ததை எல்லாம் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய அளவிற்குப் பொருளாதார நிலையும் இருக்கும். குடும்பத்தில் நீண்ட காலமாக தடைப்பட்டு வந்த சுபகாரியங்களும் தடைகள் விலகிக் கைகூடும். பொன், பொருள் சேரும். சிலருக்கு வீடு, மனை, போன்றவை உண்டாகும். தெய்வ தரிசனங்களுக்காக பயணங்களை மேற்கொள்வீர்கள். உங்களிடமிருந்து விலகியிருந்த உறவினர்களும் தேடி வந்து நட்புப் பாராட்டுவார்கள். வங்கிச் சேமிப்பு பெருகி வாழ்க்கை வளம் தரும்.

### உத்தியோகஸ்தர்களுக்கு

உத்தியோகஸ்தர்கள் மீதிருந்த வீண் பழிச் சொற்கள் அனைத்தும் விலகி மன நிம்மதி உண்டாகும். மற்றவர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறும். மேலதிகாரிகளின் பாராட்டுதல்களைப் பெறுவீர்கள். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கப்பெறும். புதிய வேலை தேடுபவர்களுக்கும் சிறப்பான வேலை வாய்ப்புக் கிட்டும். பயணங்களால் அனுகூலங்கள் உண்டாகும்.

### வியாபாரிகளுக்கு

தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கிருந்த போட்டி பொறாமைகள் மறைமுக எதிர்ப்புகள் யாவும் விலகி இலாபங்கள் பெருகும். கூட்டாளிகளிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் மறையும். தொழிலாளி, முதலாளி என்ற பாகுபாடின்றி தொட்டதெல்லாம் துலங்கும். வெளியூர் வெளிநாட்டு தொடர்புடையவைகளாலும் அனுகூலமான பயணங்கள் அமையும். பெரிய முதலீடுகளை ஈடுபடுத்தி செய்ய நினைக்கும் காரியங்களில் வெற்றி கிட்டும். எதிர்பாராத இலாபங்கள் அபிவிருத்தியைப் பெருக்கவும் உதவும். வங்கிக் கடன்கள் குறையும். அரசு வழியிலும் சாதக பலன்கள் அமையும்.

### அரசியல் வாதிகளுக்கு

அரசியலில் பெயர் புகழ் உயரக்கூடிய காலமாகும். உங்களின் பேச்சிற்கே எல்லா இடங்களிலும் மதிப்பும், மரியாதையும் உயரும். மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றி அவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி மேல் வெற்றி கிட்டும். கட்சிக்காக செலவுகள் பல செய்தாலும் வரவேண்டிய இலாபங்களும் வந்து சேரும்.

### விவசாயிகளுக்கு

விவசாயிகள் தொட்டதெல்லாம் பொன்னாகும். சந்தையிலும் விளை பொருளுக்கேற்ற இலாபங்களும் சிறப்பாக இருக்கும். பூ, காய் கனி போன்றவற்றை பயிரிடுவோருக்கும் இலாபங்கள் சிறக்கும். ஆடு, மாடு, போன்ற கால் நடைகளாலும் இலாபத்தைப் பெற முடியும். புதிய பூமி, மனை போன்றவை வாங்கக் கூடிய வாய்ப்பும் அமையும். புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்டும்.

### பெண்களுக்கு

உடல் ஆரோக்கியம் ஓரளவுக்குச் சிறப்பாக இருக்கும். திருமண வயதை அடைந்தவர்கள் சிறப்பான மண வாழ்க்கை அமையப் பெறுவீர்கள். கணவன், மனைவியிடையே அன்னியோன்யம் அதிகரிப்பதால் குடும்ப வாழ்க்கையும் சிறப்பாக அமையும். அழகான புத்திர பாக்கியத்தைப் பெற்றெடுக்கும் யோகமும் உண்டாகும். பணவரவுகள் தாராளமாக இருப்பதால் குடும்பத்திற்குத் தேவையான நவீன பொருட்களை வாங்கிச் சேர்ப்பீர்கள். உற்றார் உறவினர்களின் ஆதரவும் மகிழ்ச்சியளிக்கும். பணி புரிபவர்களுக்கு மேன்மைகள் உண்டாகும்.

### மாணவர்களுக்கு

மாணவர்கள் கல்வியில் பல சாதனைகள் செய்யக்கூடிய வாய்ப்பு அமையும். கல்விக்காக எடுக்கும் காரியங்கள் அனைத்திலும் அனுகூலமான பலன்கள் அமையும். நல்ல நட்பு வட்டாரங்களும் அமையப் பெறுவதால் சிறப்பான உதவிகள் கிடைக்கும். வெளியூர் வெளிநாடுகளுக்குச் சென்று படிக்கக்கூடிய வாய்ப்பு அமையும். பெற்றோர், ஆசிரியர்களின் ஒத்துழைப்பு சிறப்பாக இருக்கும்.

# காணி நடவடிக்கைகள் குறித்து பாண்டியன்குளத்தில் செயலமர்வு



(பாண்டியன்குளம்)

முல்லைத்தீவு, பாண்டியன் குளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு காணி விடயங்கள் தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

பாண்டியன்குளம் பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்ற இச்செயலமர்வு மனித உரிமைகள் இல்லத்தின் வவுனியா அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. , மக்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் தற்போதைய காணிச் சட்டங்கள் தொடர்பாக இதன்போது விளக்கமளிக்கப்பட்டது. மீள்குடியேறிய மக்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன் போது ஆராயப்பட்டது.

இச்செயலமர்வின் வளவாளராகக் கலந்து கொண்ட வவுனியா பிரதேச செயலகத்தின் குடியேற்ற உத்தியோகஸ்தர் க.வசந்தன் மக்களது காணி விடயங்களுக்கு எவ்வாறான தீர்வைப் பெறுவது மற்றும் சட்ட ரீதியான அங்கீகாரம் பெறல் தொடர்பாகவும் விளக்கமளித்தார்

# நெடுங்கேணியில் சேவை நலன் பாராட்டு



வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றலாகிய ஊழியர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

நெடுங்கேணிப் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வு பிரதேச செயலகத்தின் கணக்காளர் த.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற ஊழியர்களின் சேவைகள் மற்றும் அவர்களது வெற்றிடத்தினை ஏனைய ஊழியர்கள் எவ்வாறு நிவர்த்தி செய்து பணியாற்ற வேண்டுமென்பது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டன. சேவைக்காலத்தில் அவர்களது பணிகள், யுத்த நேரத்தில் அவர்களது சேவைகள் தொடர்பிலும் இதன்போது எடுத்துரைக்கப்பட்டது.

# கடற்தொழிலாளர்களுக்கான....

அந்தத் தொழிலில் ஈடுபட்டார்கள் இது உண்மை! கௌரவ உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் சொல்வது உண்மை! நானும் நேரடியாக அதைப் பார்த்திருக்கிறேன். இது கடலட்டை பிடிக்கும் season அல்ல அதனால், கடந்த இரண்டு மாதங்களாக அங்கு அவர்கள் எவரும வரவில்லை. இதை வைத்துக்கொண்டு அவர்கள் திரும்பவும் வர மாட்டார்களென்ற நம்பிக்கை அந்தத் தொழிலாளர்கள் மத்தியில் இல்லை.

அமைச்சர் அவர்களே, நீங்கள் இது விடயத்தில் இறுக்கமான ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். அங்குள்ள கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு உங்களிடம் இருக்கின்றது. ஆகவே, அதை நீங்கள் சரிவரச் செய்யவேண்டுமென்று அந்த மக்களின் சார்பாக நான் இந்த அவையினூடாக உங்களிடம் உருக்கமாக கேட்க விரும்புகின்றேன்.

தங்களின் அயராத உழைப்பின் காரணமாக இரணைமடுக்குளத்தில் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காகவும் அந்த மக்களின் சார்பாக நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால், கட்டுப்பாட்டுடனான அனுமதிதான் வழங்கப் பட்டிருக்கிறது என்றாலும், கடந்த காலங்களில் இரணைமடுக் குளத்தில் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட எல்லோருக்கும் அந்த அனுமதி கிடைக்கவில்லை. 105 பேருக்கு மட்டுந்தான் இதுவரை அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் 200 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அந்த அனுமதிக்காகக் காத்திருக்கின்றார்கள். அவர்களுக்கும் அங்கு நன்னீர் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்குரிய ஏற்பாடுகளை நீங்கள் செய்துதர வேண்டும்.

அதுமட்டுமல்ல, கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய நீர் நிலைகளிலும் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முக்கிய சில குளங்களில் அப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன. அக்கராயன்குளத்தில் மீன் குஞ்சுகள் போடப் பட்டிருக்கின்றன. அதேபோன்று, ஏனைய எல்லாக் குளங்களிலும் நன்னீர் மீன்பிடியை ஊக்குவித்து அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்திற்கு வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஏற்கனவே கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சினால் உறுதியளிக்கப்பட்டதன் பிரகாரம் குருநகர், கிளாலி, வலைபபாடு, மயிலிட்டி, பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, சுண்டிக்குளம் ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படும் என்ற விடயம் செயற்படுத்தப்படுவது விரைவுபடுத்தப்பட வேண்டும். இதற்கு ஊடாகத்தான் கடற்றொழிலாளர்கள் உச்சப் பயனை அடைய முடியும்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்துக்கான வெளிக்கள உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் ஏனைய அலுவலகப் பணியாளர்கள் உள்ளிட்ட ஆளணியினரை உள்வாங்குவதற்கு நீங்கள் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இது சம்பந்தமாக நீங்கள் ஏற்கனவே எடுத்த நடவடிக்கையை இன்னும் விரைவுபடுத்துவதற்காகவே நான் இந்த விடயத்தை இங்கே மேலும் வலியுறுத்துகின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மீன்பிடித்துறையில் டிப்ளோமாப் பாடநெறியை முடித்த, வேலையற்ற நிலையில் இருக்கும் பட்டதாரிகளைக் கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் வெளிக்கள உத்தியோகத்தர்களாக உள்வாங்குவதற்குரிய நடவடிக்கைகளை நீங்கள் எடுத்திருக்கின்றீர்கள். அதற்காகவும் உங்களுக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

உங்கள் அமைச்சின் செயலாளர் அவர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை காட்டியிருக்கின்றார். இருந்தபோதிலும் அந்த ஆட்சேர்ப்பு நடைமுறைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். நீங்கள் இதை விரைவாகச் செயல்வடிவப் படுத்துவதன் ஊடாக இந்தத் தொழில்வாய்ப்புக்காகக் காத்திருக்கும் 60 இளைஞர்கள் - யுவதிகளின் வாழ்க்கையில் ஒளியேற்ற முடியும்.

வட மாகாணத்துக்கு என்று தனியான மீன்பிடிப் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பாக நாங்கள் ஏற்கனவே உங்களுடன பேசியிருக்கின்றோம். மீன்பிடித்துறையின் வளர்ச்சிப் போக்குக்கு ஏற்ற மாதிரி வட மாகாண மீனவர்களும் தங்களது தொழிலை இன்றைய நவீன தொழில்நுட்பங்களூடாக விருத்தி செய்வதற்கு இந்த நடவடிக்கைகள் ஏதுவாக இருக்கும். அமைச்சர் அவர்களே! உங்கள் அமைச்சுக்கு ஊடாக வட மாகாணத்தின் மீன்பிடித்துறை வளர்ச்சி கண்டிருப்பதையிட்டு நாங்கள் உங்களைப் பாராட்டுகின்றோம். அதற்காக உங்களுக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கவும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

எதிர்காலத்திலும் வடக்கு கிழக்கு மாகாண கடற்றொழிலாளர்களது தேவைகள் குறித்து நீங்கள் அதிக கரிசனையுடன் செயற்பட்டு அவர்களது வாழ்வாதாரத்திலும் மற்றும் இலங்கையின் கடற்றொழில் துறையிலும் மேலும் வளர்ச்சியை ஏற்படுத்தித்தருவீர்கள் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தி, சந்தர்ப்பத்துக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.



புங்குடுதீவு பாரதி சனசமூக நிலைய நிர்வாகத் தெரிவுக் குழுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தீவக விளையாட்டுக்கழகங்களினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்கான பரிசில்களை வேலணைப் பிரதேச சபை யின் தவிசாளரும், ஈ.பி.டி.பி.யின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமான சி. சிவராசா வழங்குவதைக் காணலாம். (85)

# மாவட்ட மட்ட கூடைப்பந்து வெற்றிபெற்ற அணிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் மாவட்ட மட்டக் கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

லீக் முறையில் நடைபெற்று வரும் இப்போட்டியில் கடந்த ஐந்து போட்டிகளிலும் வெற்றியீட்டிய அணிகள் விபரம் வருமாறு:

சென்றலைட்ஸ் அணிக்கும் கோப்பாய் யுனைட்டட் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் 31-16 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென்றலைட்ஸ் அணி வெற்றிபெற்றது.

பற்றீசியன் அணிக்கும் ஜொனியன்ஸ் அணிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் பற்றீசியன் அணி 43-42 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

ஜொலிஸ்ரார் அணிக்கும் கோப்பாய் யுனைட்டட் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் ஜொலிஸ்ரார் அணி 29-28 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

கே.கே.எஸ். அணிக்கும் ஒங்கோட்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் கே.கே.எஸ். அணி 42-16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

யாழ். பல்கலை அணிக்கும் கோப்பாய் யுனைட்டட் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் யாழ். பல்கலை அணி 52-10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

லீக் முறையில் இடம்பெற்று வரும் இப்போட்டியில் புள்ளிகள் அடிப்படையில் அணிகள் அடுத்த சுற்றுக்குத் தெரிவாகும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# வடக்கு மாகாணம் காலிறுதியில் அவுட்


(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றினால் நடத்தப்பட்ட தேசிய மட்ட கரப்பந்தாட்ட காலிறுதிப் போட்டியில் வடமாகாணம் அணி தோல்வியடைந்துள்ளது.

மாகாணங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் இப்போட்டியில் வடமாகாண அணி தனது முதல் போட்டியில் ஊவா மாகாண அணியுடன் மோதியது. இதில் சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்திய வடமாகாண அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் மேல் மாகாண அணியும் வடமாகாண அணியும் மோதின. இதில் 0-3 என்ற நேர் செட் கணக்கில் வடமாகாண அணி தோல்வியடைந்தது. (93)

# சச்சினுக்கு பாரத ரத்னா



(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் நட்சத்திரமான சச்சின் டெண்டுல்கர், ஹொக்கி நட்சத்திரம் தயான் சந்த் ஆகியோருக்கு இந்தியாவின் அதி உயர் விருதான பாரத ரத்னா விருது வழங்கப்படவுள்ளது. இதற்கான பாரத ரத்னா விருதுத் தெரிவுக்கான விதிமுறைகளில் இந்திய அரசு திருத்தங்களைச் செய்துள்ளது.

கிரிக்கெட் விளையாட்டில் ஏராளமான சாதனைகளைப் படைத்த சச்சின் டெண்டுல்கருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட வேண்டும் என நீண்டகாலமாக பலர் வலியுறுத்தி வருகின்றனர்.

எனினும் இவ்விருதுக்கு தெரிவு செய்யப்படக்கூடியவர்களின் தகுதிக்கான பட்டியலில் விளையாட்டுத்துறை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. கலை, இலக்கியம், விஞ்ஞானம் பொதுச்சேவை ஆகிய துறைகளுக்கே இதுவரை பாரத ரத்னா விருதுவழங்கப்பட்டது.

இதனால் சச்சினுக்கு இவ்விருது வழங்கப்பட முடியாத நிலை இருந்தது.

ஆனால் இந்திய உள்துறை அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சிபாரிசுகளையடுத்து பிரதமர் அலுவலகம் ஊடாக இவ்விதிகளில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்திய ஹொக்கி அணியின் முன்னாள் தலைவரான தயான் சந்த், 1979 ஆம் ஆண்டு தனது 74 ஆவது வயதில் காலமானார். 1928, 1932, 1936 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய அணியின் நட்சத்திரமாக அவர் விளங்கினார்.


இந்தியப் பிரதமரின் சிபாரிசுக்கிணங்க ஜனாதிபதியினால் பாரத ரத்னா விருது வழங்கப்படுகிறது. 1954 முதல் 41 பேருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு தாயின் சபதம்

அடுத்த வருடம் இடம்பெறவுள்ள தொடர்களில் என்னால் நிச்சயம் சாதிக்க முடியும் என பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய ஓப்பனில் பட்டம் வென்று இந்த ஆண்டை சிறப்பாகத் தொடங்கிய நான், காயம் காரணமாக வெற்றி நடையை தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை.

காயம் காரணமாக நிறையத் தொடர்களில் பங்கேற்க முடியாமல் போனது வருத்தம் அளிக்கிறது. இதுகுறித்து அதிகம் கவலைப்படப் போவதில்லை. தற்போது காயத்தில் இருந்து மீண்டு, முழு உடற்தகுதியுடன் உள்ளேன். அடுத்த ஆண்டு நடக்கவுள்ள தொடரில் நிச்சயம் சாதிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது. இதற்காக இப்போதிருந்தே தயாராகி வருகிறேன், என்றார்.



தற்காலிக ஓய்வுக்குப் பின் அசத்திய இவர், 2009, 2010இல் நடந்த யு.எஸ்., ஓப்பனில் அடுத்தடுத்து சம்பியன் பட்டம் வென்று சாதித்தார். இதேபோல, 2010இல் டபிள்யு.டி.ஏ., உலக சம்பியன்ஷிப் தொடரில் பட்டம் வென்றார். இந்த ஆண்டுத் தொடக்கத்தில் அவுஸ்ரேலிய ஓப்பனில் சம்பியன் பட்டம் வென்ற இவர், அடுத்தடுத்து நடந்த தொடர்களில் காயம், உடற்தகுதி உள்ளிட்ட பிரச்சினைகளால் பங்கேற்கவில்லை. இதனால் டபிள்யு.டி.ஏ., தரவரிசைப் பட்டியலிலும் பின்னடைவைச் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

# முன்னேற்றம் வேண்டும்



(வெலிங்டன்)

நியூசிலாந்து அணி துடுப்பாட்டத்தில் முன்னேற்றம் காண வேண்டும் என, பயிற்சியாளர் ஜோன்ரைட் தெரிவித்துள்ளார்.

கடந்த 26 ஆண்டுகளுக்குப் பின் அவுஸ்ரேலிய மண்ணில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது. இது மகிழ்ச்சி அளித்தாலும், துடுப்பாட்ட வீரர்கள் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும். ஒரு இன்னிங்சில் கூட 300 ஓட்டங்களுக்கு மேல் எடுக்கவில்லை. இது துடுப்பாட்ட வீரர்கள் போதுமான ஆட்டத்திறன் இல்லாததைக் காட்டுகிறது.

டெஸ்டில் வீரர்கள் ஜொலிக்க முடியாததற்கு போதுமான பயிற்சி இல்லாதது தான் காரணம். தற்போதுள்ள நிலையில், நிறைய ஒரு நாள், ருவென்ரி-20 போட்டிகளில் விளையாடுகிறோம். ஆனால் டெஸ்ட் போட்டியில் குறைந்த அளவே பங்கு பெறுகிறோம். அணியில் நிறைய இளம் வீரர்கள் உள்ளனர். இவர்களுக்கு சரியான முறையில் பயிற்சி வழங்குவதன் மூலம் அணியினை முன்னணியாக்கிக் கொண்டு செல்லலாம் எனவும் தெரிவித்தார்.

# அரையிறுதியில் சாய்னா



(லிசோவ்)

உலக சூப்பர் சீரிஸ் பட்மின்ரன் இறுதிச் சுற்றுப் போட்டி சீனாவின் லிசோவ் நகரில் நடந்து வருகிறது. இதில் இந்தியாவின் சாய்னா நேவால் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

பி பிரிவில் இடம் வகிக்கும் சாய்னா நேவால், தனது தொடக்க ஆட்டத்தில் கொரியாவின் பே யூனை வென்றார். இந்த நிலையில் 2ஆவது லீக்கில் ஜப்பானின் சாடா சயாகாவுடன் நேற்று முன்தினம் மோதினார். இதில் தொடக்கம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய சாய்னா, எதிராளியை நிமிர விடாமல் பந்தாடினார். 36 நிமிடங்கள் நடந்த ஆட்டத்தின் முடிவில் சாய்னா 21-6, 21-13 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.


## விளையாட்டுச் செய்திகள்



சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் கிளப் அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டியில் அல்சாத் அணியின் கோல் கீப்பர் முகமது சகிரை ஏமாற்றி அந்தரத்தில் கோல் அடிக்க முயன்ற பார்சிலோனா வீரர் மெஸ்ஸியைக் காணலாம்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் சான்டோஸ் அணி 3-1 என்ற கோல் கணக்கில் கசிவா ரேசால் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸிக்கு கடும் நெருக்கடி கொடுப்போம்



(கான்பெரா)

அவுஸ்ரேலிய அணிக்கு கடும் நெருக்கடி கொடுப்போம் என இந்திய துடுப்பாட்ட வீரர் ரோஹித் ஷர்மா தெரிவித்துள்ளார். கடந்த 2 வாரங்களாக அவுஸ்ரேலியத் துடுபபாட்ட வீரர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளை நாங்கள் கூர்ந்து கவனித்து வருகிறோம். எனவே அவுஸ்ரேலியாவின் நெருக்கடிகளை மனதில் கொண்டு முதல் டெஸ்டில் களமிறங்கவுள்ளோம். நாங்கள் மேலும் நெருக்கடிகளை அதிகரிப்போம்.

அவுஸ்ரேலிய துடுப்பாட்ட வீரர்கள் ஸ்விங் பந்து வீச்சுக்கு எதிராக பலவீனமடைகிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். எங்களிடம் சிறந்த ஸ்விங் பந்து வீச்சாளர்கள் உள்ளனர். இதனால் அவுஸ்ரேலியாவுக்கு கடும் சவால்களை ஏற்படுத்துவோம். இன்னும் 10 நாட்கள் டெஸ்ட் போட்டிக்கு இருப்பதால் பந்து வீச்சாளர்கள் எதைச் சரியாகச் செய்கிறார்கள், எதைத் தவறாகச் செய்கிறார்கள் என்பதைப் பார்க்க நேரம் உள்ளது. எனவே அதனைத் திருத்திக் கொண்டு அவுஸ்ரேலியாவுக்கு நெருக்கடி கொடுப்போம் என்றார்.

# முப்பது வருட சோக நாடகம் தற்போது முடிவடைந்துள்ளது



## ஜனாதிபதி மகிழ்ச்சி

(கொழும்பு)

கடந்த 30 ஆண்டுகளாக அரங்கேற்றப்பட்டு வந்த சோக நாடகம் தற்போது முடிவடைந்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சீன அரசாங்கத்தின் அன்பளிப்பான தாமரை தாடகம் மகிந்த ராஜபக்ஷ என்ற பெயரிலான கலையரங்க அங்குரார்ப்பண நிழ்வில் கலந்து கொண்ட போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அழுது, புலம்பி, கவலைப்படும் யுகம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நாட்டின் செழுமையை பிரதிபலிக்கும் நாடகங்களை அரங்கேற்றக் கூடிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. நூறு ஆண்டுகள் கலைச்சேவை ஆற்றி வரும் டவர் அரங்கைப் போன்றே தாமரைத் தடாக அரங்கும் நாட்டு மக்களுக்கு அரிய கலைச் சேவைகளை ஆற்றும். மக்களின் பௌதீக வாழ்க்கையைக் கட்டியெழுப்புதல் மற்றும் அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்தல் போன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கடற்படையால் கைதான மீனவர்கள் விடுதலை

(கொழும்பு)

கச்சதீவு பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் ஐந்து பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட அலிவார், மாரி, சந்திரன், பத்மநாபன், ஜஸ்டின் ஆகிய ஐந்து மீனவர்களும் நேற்றுமுன்தினம் இரவு வீடு திரும்பினர். அவர்கள், இராமேஸ்வரத்தில் இருந்து விசைப்படகு மூலம் மீன்பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்றனர்.

கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினர் இவர்களைப் பிடித்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏ.ரி.எம். இயந்திரத்தில் 66 இலட்சம் திருடியவர் கைது

(கொழும்பு)

கந்தளாயிலுள்ள அரச வங்கியொன்றில் கடந்த 8 ஆம் திகதி ஏ.ரி.எம். அட்டை மூலம் 66 இலட்சம் ரூபாவைத் திருடியதாகக் கூறப்படும் சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்நபர் பேராறுப் பகுதியில் ஒளிந்திருந்தபோது கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இச்சந்தேக நபர் போதைப் பொருளுக்கு அடிமையான ஒருவர் எனக் கருதப்படுவதாகவும் அவர் கூறினார். கந்தளாய் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டதன்பின் இந்நபர் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

அவர் கைது செய்யப்படும் போது அவரிடமிருந்து 19 இலட்சம் ரூபாவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கடந்த 11 ஆம் திகதி பேராறுப் பகுதியிலுள்ள அவரின் வீட்டிலிருந்து 42 இலட்சம் ரூபா கைப்பற்றப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கை வரும் வெளிநாட்டவரின் சுகாதாரத்தை ஆராய நடவடிக்கை

(கொழும்பு)

வதிவிட விசாவில் இலங்கைக்கு வருகைதரும் வெளிநாடடவர்களின் சுகாதார நிலைமையைக் கண்காணிக்கும் முறைமையொன்றை கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முன்வைத்த மேற்படி யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கைக்கு வதிவிட விசாவில் வரும் வெளிநாட்டவர்களின சுகாதார நிலைமையைப் பரிசோதிக்கும் முறை இதுவரை காணப்படவில்லை. இந்த நிலையில் அவ்வாறு இலங்கை வரும் வெளிநாட்டவர்களின் சுகாதார நிலைமையைக் கண்காணிப்பதற்காக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கீழ் குடிவரவு சுகாதாரப் பிரிவொன்றை அமைகக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இதனூடாக சுகாதார நிலைமை ஆராயப்படும். சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

## நாமல் ராஜபக்ஷ உட்பட 250 சட்டத்தரணிகள் பதவியேற்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர்களான பஷில் ராஜபக்ஷ நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



நாமல் எம்.பி.யின் பெற்றோர் அவரை கட்டி தழுவியதுடன் பெரும மகிழ்ச்சியடைந்தனர். இவரது சத்தியப்பிரமாணத்தின் போது மேலும் 250 பேர் சட்டத்தரணிகளாகப் பதவியேற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மனின் நிதி உதவியிலான அபிவிருத்திக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

ஜேர்மன் அரசாங்கத்தின் 11.5 மில்லியன் யூரோ நிதி உதவியுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க அமைச்சரவை அனும்தி வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சியில் தொழிற் பயிற்சி நிலையமொன்று அமைக்கப்பட உள்ளதோடு சிறு மற்றும் மத்திய தரத்திலான பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன.

நிதித் திட்ட அமுலாக்கல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அமைய இந்நிதி உதவியைப் பெறுவதற்காக ஆவணங்களில் கைச்சாத்திட அனுமதி வழங்கப்பட்டது.

## துமிந்தவுக்கு 3 மாத விடுமுறை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்கு மூன்று மாத விடுமுறை வழங்குவதற்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பிலான யோசனையை முன்வைத்து நேற்று நாடாளுமன்றில் உரையாற்றிய அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா டிசம்பர் 23 ஆம் திகதி தொடக்கம் மூன்று மாதங்களுக்கு துமிந்த சில்வா நாடாளுமன்றத்திற்கு சமூகமளிக்காதிருக்க அனுமதி வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

குறித்த வேணடுகோளுக்கிணங்க மூன்று மாத விடுமுறை வழங்குவதற்கு நாடாளுமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

## சிறுவர் இல்ல விசாரணைகள் இடைநிறுத்தப்படக் கூடாது

### பௌத்த அமைப்புக்கள் கோரிக்கை

(கொழும்பு)

தெற்கில் உள்ள அன்பு சிறுவர் இல்லம் தொடர்பான விசாரணைகள் இடைநிறுத்தப்படக் கூடாது என பௌத்த அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. சிங்கள பௌத்த அமைப்பு, தேசப்பற்றுடைய பிக்குகள் அமைப்பு மற்றும் சிந்தன பர்ஷதய என்னும் அமைப்புக்கள் கூட்டாக இணைந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

இந்த சிறுவர் இல்லத்தில் சிறுவர் விற்பனை மற்றும் வேறு பல முறைகேடுகள் இடம்பெற்று வருவதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறுவர் இல்லத்தில் நடத்தப்பட்ட முற்றுகை தொடர்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித் வெளியிட்ட கருத்துக்கள் கண்டனத்துக்குரியவை எனவும் அந்த அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. அத்துடன், விசாரணைகளை நடத்தக் கூடாது என கர்தினால் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்ததாகக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

நாட்டின் சட்டத்திற்கும், மக்கள் ஆணைக்கும் எதிரான வகையில் எவரும் கருத்துக்களை முன்வைக்கக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வழக்கு விசாரணைகளை திடீரென வாபஸ் பெற்றுக் கொண்டமை சட்டவிரோதமானது என தேசப்பற்றுடைய பிக்குகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பெங்கமுவே நாலக்கத் தேரர் தெரிவித்துள்ளார்.

1980 ஆம் ஆண்டுகளிலிருந்து சிறுவர்களை விற்பனை செய்யும் நடவடிக்கை நாட்டில் இடம்பெற்று வருகின்றது. அதிகளவில் சிங்கள பௌத்த சிறுவர்களும், இரண்டாவது இந்துச் சிறுவர்களும் விற்பனை செய்யப்படுகின்றனர். 11 முதல் 12 இலட்சம் வரையில் சிறுவர்களுக்காக செலுத்தப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், சிறுவர் இல்லத்தில் எந்தவிதமான குற்றச் செயல்களும் இடம்பெறவில்லை என இரகசியப் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இந்த அறிக்கையை கவனத்திற் கொண்ட நீதிமன்றம் குறித்த சிறுவர் இல்லத்தின் பொறுப்பாளராகக் கடமையாற்றிய அருட்சகோதரியை குற்றமற்றவர் என விடுதலை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 100 குளங்கள் வடக்கில் புனரமைப்பு

(கொழும்பு)

வடக்கில் அடுத்த வருடம் முதல்க் காலாண்டுக்குள் 100 விவசாயக் குளங்களை புனரமைப்புச் செய்வதற்காக நிதியொதுக்கீடு மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் ரிசாட் பதியுதீனிடம், விவசாய நீர்ப்பாசன அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மீள்குடியேறியுள்ள மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுவதாகவும் அவர்கள் தமது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தூர்ந்து போயுள்ள மற்றும் கைவிடப்பட்ட குளங்களைப் புனரமைக்க வேண்டிய தன அவசியத்தை அமைச்சர் ரிசாட் பதியுதீன், சந்திரசேனவுக்கு கூறியிருந்தார்.

இதேவேளை மன்னாரில் முறிச்சுக்கட்டி, வெல்லாங்குளம், பெரியமடு, மற்றும் வவுனியாவில் சூடுவெந்தபுளவு பகுதிகளில் கமநல சேவை நிலையங்களை அமைக்கவுள்ளதாகவும் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன குறிப்பிட்டுள்ளார்.

# மரக்கறிகளுக்கு பிளாஸ்ரிக் கூடை; சட்டம் மீண்டும் அமுலுக்கு வரும்

(கொழும்பு)

மரக்கறிகள் மற்றும் பழவகைகளைக் கொண்டு செல்வதற்கு பிளாஸ்ரிக் கூடைகளை பயன்படுத்துவதற்கு மேலும் ஒரு மாத கால அவகாசம் விடுக்கப்பட்டுள்ளதே தவிர அந்தச் சடடத்தில் கொள்கை ரீதியில் எதுவித மாற்றங்களும் ஏற்படுத்தப்படமாட்டாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தச் சட்டம் நாட்டுக்கு உகந்த வகையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. மாறாக இதனை நடைமுறைப்படுத்துவதிலேயே அரசாங்கம் சிற்சில பிரச்சினைகளையும் தோல்விகளையும் எதிர்நோக்கியது. இவற்றை இனங்கண்டு தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதியினால் ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.



இவை தொடர்பில் வர்த்தகர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விளக்கமளித்துள்ளார் என்று அமைச்சரவையின் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

# இடிந்தது மாநகர சபைக் கட்டடம் நான்கு ஊழியர்களுக்குக் காயம்

(கொழும்பு)

நீர்கொழும்பு மாநகர சபை பிரதான கட்டடத்தின் ஒரு பகுதி கூரை நேற்றுமுன்தினம் முற்பகல் 10.15 மணியளவில் உடைந்து வீழ்ந்தது. இதன் காரணமாக நான்கு ஊழியர்கள் காயங்களுக்கு உள்ளாகி நீர்கொழும்பு மாவட்ட வைத்தியாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அத்துடன் சம்பவத்தை அடுத்து அங்கிருந்த ஊழியர்கள் பாதுகாப்பு கருதி வெளியேற்றப்பட்டனர்.

இச்சம்பவம் காரணமாக மாநகர சபையின் விநியோகம் மற்றும் சம்பளப் பகுதி அறையின் கூரை முற்று முழுதாக உடைந்து விழுந்துள்ளது. அங்கிருந்த பொருட்கள் பலவும் சேதமடைந்துள்ளன.

சம்பவத்தை அடுத்து நீர்கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புப் படைப்பிரிவினர் சம்பவ இடத்துக்கு வந்து உடைந்த கூரைப் பகுதியை அகற்றியதுடன் அங்கிருந்த ஆவணங்களையும் கணினி மற்றும் அலுவலக உபகரணங்களையும் பாதுகாப்பாக அகற்றினர்.

இந்தக் கட்டடத்தின் கூரைப பகுதி நீண்ட காலமாகவே சேதமடைந்திருந்ததாகவும் இது தொடர்பாக ஏற்கனவே பல தடைவைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் மாநகர சபை ஊழியர்கள் தெரிவித்தனர்.

## சவூதி வர்த்தகக் குழு இலங்கை வருகை

(கொழும்பு)

சவூதிய அரேபியா நாட்டைச் சேர்ந்த உயர் வர்த்தகப் பிரமுகர்களைக் கொண்ட குழு ஒன்று நேற்றுமுன்தினம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

இலங்கையில் தொழில் முயற்சிகளில் முதலிடுவது தொடர்பாகவும், ஏனைய சமூகப் பணிகளில் ஈடுபடுவது தொடர்பாகவும் கவனம் செலுத்தும் நோக்குடன் இக்குழு இலங்கைக்கு வருகை தந்துள்ளது.

சவூதி அரேபிய வர்த்தகப் பிரமுகரான அஷ்-ஷேஹ், அபு சாலிஹ் ஹாலித் அத்தாவூத், அஷ்-ஷேஹ் சாலிஹ் பின் அல்-ஆஸ் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

# இலங்கையில் 2013 ஆம் ஆண்டில் அனைவருக்கும் இணைய வசதி

## அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

(கொழும்பு)

நாட்டின் சகல வீடுகளுக்கும் இணைய வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என தொலைத்தொடர்பு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். வரவு-செலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பு விவாதங்களில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சகல வீடுகளுக்கும் ப்ரோட்பான்ட் இணைப்பை வழங்க ஸ்ரீ லங்கா ரெலிகொம் நடவடிக்கை எடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார். 66272 ப்ரோட்பான்ட் இணைப்புக்கள் இது வரையில் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் 276,950 இணையப் பாவனையாளர்கள் இருக்கின்றனர். அம்பாந்தோட்டையில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று உருவாக்கப்படவுள்ளது. இந்த நிலையில் நாட்டின் சகலருக்கும் இணைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் இலட்சக் கணக்கானவர்களுக்கு இன்னமும் மின்சார இணைப்புக்களே வழங்கப்படவில்லை எனவும், 2013 இல் சகலருக்கம் இணையம் என்ற திட்டம் நடைமுறைச் சாத்தியமற்றது எனவும் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

# நெடுஞ்சாலையில் சட்டத்தை மீறிய 153 பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதி திறந்துவைக்கப்பட்ட நாள் முதல் இதுவரை வீதிப்போக்குவரத்துச் சட்டத்தை மீறிய 153 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் காலப் பகுதியில் 15 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளதாகவும் அதிக வேகத்துடன் வாகனங்கள் செலுத்தப்படுகின்றமை மற்றும் வீதி சமிக்ஞைகளை சாரதிகள் கவனத்தில் கொள்ளாமல் செயற்படுகின்றமை ஆகிய காரணங்களினாலேயே விபத்துக்கள் அதிகரிப்பதாகவும் பொலிஸ ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இந்நிலையில் தெற்கு அதிவேக வீதிக்குரிய போக்குவரத்துச் சட்டங்கள் தொடர்பாக சாரதிகளையும் பொதுமக்களையும் மேலும் தெளிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தெற்கு அதிவேக வீதியில் நடந்து செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறும் இந்த வீதியில் நடந்துசென்ற ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒப்பந்தக் கொலை; சந்தேக நபர் கைது

(கொழும்பு)

ஒப்பந்த அடிப்படையில் கொலை மேற்கொண்ட அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கல்கிரியாகம கரவில பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவரைக் கொலை செய்வதற்கு ஒரு இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் கொலை செய்ததாக சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த சந்தேக நபர் நாரம்பல பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கொலைச் சம்பவம் இடம்பெற்று ஆறு மாதங்களின் பின்னர் சந்தேக நபர் ்கைது செய்யப்பட்டுள்ளதுடன், கொலையுண்ட நபரின் மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் மீட்டனர்.

சந்தேக நபர் மோட்டார் சைக்கிள் இலக்கத் தகட்டை மாற்றி நண்பர் ஒருவருக்கு வழங்கியதாகப் பொலிஸார் நடத்திய விசாரணைகளில் தகவல் வெளியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொலைக்களமாக மாறிவரும் காப்பெற் வீதிகள்

போக்குவரத்தை இலகுவாக்குவதற்காக காப்பெற் வீதியாக்கப்படும் யாழ்ப்பாணத்தின் சில வீதிகள் பயணிகளுக்கு கொலைக்களமாக மாறி வருகிறது.

இதற்கு அண்மைய உதாரணமாக டிசம்பர் 13ஆம் திகதி வடமராட்சி குஞ்சர்கடைச் சந்திக்கு அருகில் அதிவேகமாகப் பயணித்த வாகனம் மின்கம்பம் மற்றும் பனை மரத்துடன் மோதி இருவர் பலியாகியுள்ளமையைக் குறிப்பிடலாம்.

காப்பெற் வீதி என்றதுமே கட்டுப்பாடின்றி அதிவேகமாகப் பயணிக்கும் வாகனங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாவதாலேயே இவ்வாறு உயிரிழப்புக்கள் அதிகரித்து வருகின்றன.

தட்டாதெருச் சந்தியிலிருந்து நல்லூர் பாரதியார் சிலை வரையிலான அரசடி வீதி, முத்திரைச்சந்தி முதல் செம்மணி வரையிலான வீதி, ஸ்ரான்லி வீதி மற்றும் மானிப்பாய் வீதியின் யாழ்.நகரை அண்மித்த பகுதிகள், வடமராட்சியில் பருத்தித்துறை வீதி, கொழும்புத்துறை வீதி உள்ளிட்ட சில வீதிகள் தற்போது காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டுள்ளன.

இந்த வீதிகளில் பயணிக்கும் பல வாகனங்கள் அதி வேகத்துடனேயே பயணிப்பதுடன், சந்திகள், வளைவுகள் என்பவற்றில் வாகனத்தின் வேகத்தைக் குறைத்துச் செல்லாமல் வந்த வேகத்திலேயே செல்வதை அவதானிக்க முடிகிறது.

குறிப்பாக பலாலி வீதியைக் கடந்து செல்லும் அரசடி வீதியின் கந்தர்மடச் சந்தி மற்றும் யாழ். நகரை அண்மித்த மானிப்பாய் வீதி ஆகியவற்றிலேயே அதிகளவான விபத்துக்கள் நடைபெற்றுள்ளன.

**5 பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் வீதி**

செம்மணி முதல் முத்திரைச் சந்தி வரையிலான காப்பெற் வீதியில் நல்லூர் சாதனா பாடசாலை அமைந்துள்ளது. நல்லூர் பாரதியார் சிலை சந்தி முதல் தட்டாதெருச் சந்தி வரையிலான காப்பெற் வீதியில் கந்தர்மடம் அரசினர் பாடசாலை, யாழ். இந்து மகளிர் கல்லூரி என்பன அமைந்திருப்பதுடன், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மற்றும் யாழ்.இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மாணவர்களும் அதிகளவில் இந்த வீதியூடாகப் பயணிக்கின்றனர்.

குடாநாட்டுக்கு வெளியே தூர இடங்கிலிருந்து வரும் பார ஊர்திகள் உள்ளிட்ட பல வாகனங்கள் செம்மணி முதல் முத்திரைச் சந்தி வரையிலான காப்பெற் வீதியூடாகப் பயணித்து, யாழ்.நகருக்கு அப்பால் செல்லவேண்டிய வாகனங்கள் அரசடி வீதியில் தொடர்ந்து பயணிப்பதால் இந்த வீதி அதிக போக்குவரத்து நெரிசல் நிறைந்த வீதியாக மாறிவிட்டது.

5 பாடசலைகள் உள்ள இந்த வீதிகளூடாக இவ்வாறு பாரிய வாகனங்கள் அதிகளவில் நெருக்கமாக பயணிப்பதால் பாடசாலை மாணவர்கள் உயிராபத்தை எதிர்கொண்டுள்ளனர். இந்த வீதியில் கந்தர்மடம் சந்திப் பகுதி பொதுவாக தினமும் விபத்து நடைபெறும் ஒரு இடமாக மாறி வருகிறது.

இம்மாதம் முதலாம் திகதியன்று கந்தர்மடம் சந்திக்கு அருகே சைக்கிளில் தமது பேத்தியாருடன் பயணித்த வயோதிப் பெண் ஒருவர் வேகமாக வந்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டு உயிரிழந்த பரிதாபகரமான சம்பவம் நடைபெற்றிருந்தது.

**பொதுமக்கள் ஒத்துழைத்தாலே சரிவரும்**

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் இந்த விபத்துக்களைக் கட்டுப்படுத்த போக்குவரத்துப் பொலிஸார் அனைத்து முயற்சிகளை மேற்கொண்டுள்ள போதும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை என யாழ்.பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.



யாழில் எவருமே வீதி விதிமுறைகளை கடைப்பிடிக்காமையே இதற்குக் காரணம் என அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் இப்போது எவருமே போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதில்லை. பாடசாலை மாணவர்கள், முச்சக்கர வண்டிச் சாரதிகள், பொதுமக்கள் என அனைவருக்கும் வீதி விபத்துக்கள் மற்றும் வீதி விதிமுறைகள் பற்றி விழிப்பூட்டும் நடவடிக்கையில் நாம் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றபோதும், பொதுமக்களின் ஒத்துழைப்பு திருப்தி தருவதாக இல்லை என்றார்.

பொதுமக்கள் ஒத்துழைத்தாலே விபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியும் என்கிறார் அவர்.

காப்பெற் வீதிகளில் நடைபெறும் விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் வகையில் வீதிகளில் வேகக் கட்டுப்பாட்டுத் தடுப்புக்களை ஏற்படுத்தலாமே என்று கேட்டபோது, அதைப் பொலிஸார் செய்ய முடியாது என்று அவர் தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரே இதனைச் செய்ய முடியும். ஏற்கனவே இதுகுறித்து நாம் அவர்களுக்கு அறியத்தந்துள்ளோம் என்றார்.

**சிகரம் ஊடக இல்ல மாணவர்கள்**




# இணையத்துக்குச் செலவாகும் மெகா மின்சக்தி!



இணையத்தின் முதுகெலும்பு என்று, தகவல்களைப் பிரித்து அலசி உலகெங்கும் விநியோகிக்கும் சேர்வர் (server) என்றழைக்கப்படும் அளிப்பான களைச் சொல்லலாம். இவை ஏராள மான மின்சக்தியைப் பயன்படுத்து கின்றன. கூகுள் நிறுவனம் மட்டுமே நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் அளிப் பான்களைப் பயன்படுத்துகிறது. ஒவ்வொரு மாதமும் இரண்டு மில்லியன் டொலர களை மின் கட்டணமாகச் செலுத்தி இருபது மெகா டன் மின்சக்தியைச் செலவு செய்கிறது கூகுள். மின் சக்தியின் கணிசமான பகுதி இந்த அளிப்பான்க ளைக் குளிர்விப்பதில் பயன்படுகிறது. இந்தச் செலவை மிச்சப்படுத்தும் நோக்கத்தில் குளிர்ப்பிர தேசங்களில் தங்கள் அளிப்பான்களை கூகுள் மற்றும் ஃபேஸ்புக் போன்ற நிறு வனங்கள் அமைக்கத் தொடங்கியிருக் கின்றன. இவை வெளிப்படுத்தும் உபரி வெப்பத்தை, அக் குளிர்ப்பிரதேச வீடுகளுக்கு கதகதப்பு வழங்குவதற்காக விநியோகிக்கவும் திட்டம் வகுத்திருக்கிறார்கள்.

# "திராட்சை ரச"னை!



வைன் என்கிற திராட்சை ரசம் ஒன்றுதான் உலகின் பெரும்பாலான மதங்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே மது பானம். அப்பிள், ஸ்ட்ரோபெர்ரி, க்ரான், ஏன் நம்மூரில் நாவல் பழம், பலாப்பழம் போன்றவற்றின் ரசங் களையும் நொதிக்க வைத்து வைன் தயா ரிக்கப்பட்டாலும் திராட்சையில் இருந்து தாயரிக்கப்படும் வைனுக்குத் தான் மவுசு அதிகம்.

கி.மு. 6 ஆயிரம் ஆண்டில் ஈரான், ஜோர்ஜியா பகுதிகளில் வைன் தாயா ரிப்பு தொடங்கியது. திராட்சைக் கொடி என்பதற்கு லத்தீன் மொழியில் "கிரேப் லைன்" என்று பெயர். அதில் இருந்து தான் வைன் என்ற பெயரும் வந்தது.

ஏகப்பட்ட திராட்சை வகைகள் இருந் தாலும் "விடிஸ் வினிபெரா" என்ற ஒரே ஒரு இனத்தின் திராட்சை மட்டும்தான் வைன் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படு கிறது. இதிலிருந்து வெவ்வேறு வகை தயாரிப்பு முறைகள் மூலம் 4 ஆயிரம் சுவைகளில் வைன் தயாரிக்க முடியும். இயேசுநாதர் இறுதி விருந்தில் தனது உடலையும், ரத்தத்தையும் கொடுத்து பாவி களை ரட்சிக்க நினைத்தார். அதற்கான அடையாளமாக அப்பத்தை உடலாக வும், திராட்சை ரசத்தை ரதத மாகவும் பாவித்து, அனைவருக்கும் தன் கையாலேயே பரிமாறி சீடர்களை பின்பற்றச் சொன்னார். எனவேதான் வைன் ஏசுவின் ரத்தமாக கருதப்படுகிறது. கிறிஸ்துவர்களால் புனிதமாக போற்றப்படுகிறது. தேவா லயங்களில் திருப்பலி சமயத்தில் கண்டிப்பாக வைன் இடம்பெறும். வைன் அருந்துவதை மற்ற அல்கஹோல் பானங் களுடன் சேர்க்கக்கூடாது. அது ஒரு தனி ரசனை, தனி கலாசாரம் என்கிறார்கள், வைன் பிரியர்கள்.

# ஜேம்ஸ் பொண்ட் காதலி




அடுத்து தயாரிக்கப்பட விருக்கும் ஜேம்ஸ்பொண்ட் படத்தில், (ஜேம்ஸ் பொண்ட் தொடரில், 24 ஆவது படம் இது) அவரது காதலியாக நடிப்பவர் மார்-கரிட்டா லெவிவா.

ரஷ்யாவைச் சேர்ந்தவரான லெவிவா, 13 ஆண்டுகள் ஜிம்னாஸ்டிக் பயிற்சி எடுத்து, அந்த விளையாட்டில் தேர்ச்சி பெற்றவர். 2005 ஆம் ஆண்டில், நியூயோர்க் நகரில் வசிக்கும் மிகவும் அழகான, 50 பெண்களில் மார்-கரிட்டாவும், ஒருவர் என்று, "நியூயோர்க்" பத்திரிகை அறி வித்திருக்கிறது.

ஜேம்ஸ்பொண்டை விட நேர்த்தியாக இவர் பறந்து, பறந்து சண்டை போடுவார் என்பதில் சந்தேகம் இல்லை.

# லண்டன் அருங்காட்சியகத்தில் ரஜினிக்கு சிலை



இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள மேடம் துசாட்ஸ் மெழுகுச் சிலை அருங்காட்சியகம் உலகப் புகழ் பெற்றது ஆகும். மெழுகுச் சிலைகள் உருவாக்கு வதில் தலைசிறந்து விளங்கிய சிற்பி மேரிதுசாட்ஸ் என்பவர்தான் இதனை நிறுவினார்.

இதனால் அவரது பெயரி லேயே இந்த அருங்காட்சியகம் அழைக் கப்படுகிறது. இந்தியாவைப் பொறுத்த வரை கிரிக்கெட் வீரர் சச்சின் டெண் டுல்கர், இந்தித் திரையுலக பிரபலங்கள் அமிதாப்பச்சன், அவரது மருமகள் ஐஸ்வர்யா ராய், நடிகர் ஷாருக்கான், நடிகை கரீனா கபூர் உள்ளிட்ட பலரது மெழுகுச் சிலைகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் தமிழ்த் திரையுலகின் சூப்பர் ஸ்டாரான ரஜினிகாந்தின் மெழுகுச்சிலையும் இந்த அருங் காட்சியகத்தில் விரைவில் இடம்பெறப் போகிறது என்பதுதான் தற்போதைய புதிய செய்தி. இந்தத் தகவலை இரக சியமாக வைத்துள்ள அருங்காட்சியக நிர்வாகம் சிலை தயாராகி முடிந்ததும் விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்க உள்ளது.

மெழுகுச்சிலை அமைப்பது தொடர் பாக லண்டன் துசாட்ஸ் அருங்காட்சியக நிர்வாகம் சார்பில் ரஜினியிடம் அனுமதி கேட்கப்பட்டது என்றும், அதற்கு அவ ரும் மகிழ்ச்சியோடு சம்மதம் தெரிவித் தார் என்பதையும் அவரது மூத்த மரு மகன் நடிகர் தனுஷ் கூறியுள்ளார்.

# ஆச்சியை என்ன செய்ய?



வெளியூருக்குச் செல்ல வேண்டும் எல்லோரும்
ஆச்சியை என்ன செய்ய என்றுதான்
இப்போது ஆலோசனைக் கூட்டம்.

ஆச்சி ஒரு முழமாய்
குறுகி விட்டாள்
சில பருக்கைச் சோறும்
சில துளி நீரும்
அவளுக்குப் போதும்

ஆனால் அவள் தூங்குவதேயில்லை
அவள் யாரையாவது கூப்பிட்டுக்கொண்டேயிருப்பாள்
அவர்களில்
சிலர் இருப்பவர்கள்
சிலர் இறந்தவர்கள்

ஆச்சிக்குக் கண்ணில் தெரியும் பேருரு
அவளை வா வா என்கிறது சதா
தன் சிறு கைத்தடியால் ஆச்சி
அந்தப் பேருருவை
நையப் புடைப்பாள்
காலால் எட்டி விரட்டுவாள்
ஆச்சியின் உதையில்
தன் மண்டையோடு மாலைகள் குலுங்க
பதறி ஓடும் அந்தப் பேருரு

அந்தப் பேருருவின் விஷமக் கண்களில்
இப்போது கொண்டாட்டம்
ஆச்சி தனியாய் சிக்குவாள் என்று

எலி, கரப்பான், பூரானிடமிருந்து காப்பாற்ற
ஆச்சியைத் தூக்கி
மாடக்குழியில் வைத்தாயிற்று
வட்டிலில் சோறும்
கிண்ணத்தில் நீரும் கொடுத்தாயிற்று
பேருருவை விரட்ட
சீரோ வாட்ஸ் பல்பைப் போட்டாயிற்று
ஏகதேசம் எல்லாம் சௌக்கியம்

ஆச்சி முனகுவது
எப்போதும்போல்
யாருக்கும்
கேட்கவில்லை.

பேருருவை எட்டிச் சமட்டும்போது
மாடக்குழியிலிருந்து
தலைகுப்புற தான் விழுவோமென
ஆச்சிக்கு மட்டுமே
தெரிந்திருந்தது.

- எம்.டி.முத்துக்குமாரசாமி

# தமிழகத்தில் உள்ள இலங்கை மக்களின் வலியும், தவிப்பும்

இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக வும், அதனைத் தொடர்ந்தும் தமிழகத்துக்கு இடம் பெயர்ந்தோர், முகாம்களிலும், வெளியிலுமாக தங்கி இருக்கிறார்கள். இவர்களில் இலங்கையின் வடக்கு - கிழக்கை சேர்ந்தவர்கள் மட்டும் அன்றி மலையகத்தைச் சோந்தவர்களும் தங்கியிருக்கிறார்கள். மலையகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் மண்டபம் மற்றும் திருச்சி கொட்டப்பட்டு முகாம்களில் தங்கி இருக்கிறார்கள். சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தில் தாயகம் திருப்பிய ஒரு சிலர் இன்னமும் கொட்டப்பட்டு முகாம்களில் தங்கி யிருக்கின்றனர்.



அந்த ஒப்பந்தத்தில் வந்த பெரும்பாலானவர் கள் தமிழகத்தில் உள்ள தங்களது பூர்வீக இடததை தெரியப்படுத்தி தங்களது சொந்த பந்தங்களுடன் இணைந்து விட்டனர். தற் போது எஞ்சி இருப்பவர் கள் இவை தெரியாதவர்க ளாக முகாம்களிலே தங்கி யிருக்கிறார்கள்.

வெளியில் தங்கியிருக் கும் இலங்கை மக்களுக்கு அரசின் எந்தவித உதவியும் இல்லை. அவர்கள், தங்களது சம்பாத்தியத்தை நம்பியே வெளியில் இருக்கவேண்டும். அவர்கள் கட்டா யம், அவர்கள் இருக்கும் பகுதி பொலிஸில் பதிவு பெற்று இருக்கவேண்டும். முகாமில் உள்ளவர்களுக்கு முகாம் பதிவு இருக்கும் அவர்கள் வெளியில் வேலைக் குச் செல்லும்போது முகாமில் உள்ள பதிவேட்டில் முகாமைவிட்டு வெளிச் செல்லும் நேரம் உள்ளே வரும் நேரம் குறிப்பிட வேண்டும்.

இலங்கையை விட்டு இடம் பெயர்ந்த மக்களில் பலர் தங்களது பிள்ளைகளின் படிப்பு விடயத்தில் மிகவும் அக்கறையாக உள்ளார்கள், பலர் தங்கள் பிள்ளைகளை நல்ல படிப்பு படிக்கவும் வைத்துள்ளனர். இலங்கை செல்ல பலர் தயக்கம் காட்டுவதற்கு தங்கள் பிள்ளைகளின் கல்வி விடயமும் ஒன்றாகும்.

இலங்கை செல்ல பலர் தயங்குவதற்கு பிரதான காரணமாக இருப்பது பொருளாதார நிலைமை, வாழ்க் கையை தொலைத்த அவர்கள் இலங்கை செல்ல தயங்குவதற்கு இது ஒரு நியாயமான காரணமாகும்.

அகதிகள் முகாமில் இருந்த ஒருவர் நன்றாக கூலி வேலை செய்து சம்பாதித்தார், தாய்நாட்டின் ஏக்கம் அவரை வாட்டிய போது இலங்கை சென்றார். ரொம்ப நாட்களுக்குப் பின்னர் ஊர் சென்றவருக்கு உபசரிப்பு என்றால் சொல்லி வேலை இல்லை. இவை சில நாட்கள்தானே, நிலைமையை உணர்ந்த அவர் தொழில் தேட முயன்றுள்ளார். கூலித் தொழிலுக்குச் சென் றுள்ளார். ஆனால் அவருக்கு நிரந்தர வேலை இல்லை அதனால் மீண்டும் அகதியாக வந்து விட்டார்.

பல வருடங்கள் வாழ்க்கையைத் தொலைத்த அவ ருக்கு, இலங்கையில் உள்ள சிலரின் வாழக்கை முறை வெறுப்படைய வைத்துள்ளது. பலர் வசதியாக உள்ள னர் என்றும் தங்கள் சொந்தத்திலே பலர் வசதியாக இருப்பதாகவும் தான் இனி அவர்கள் அளவுக்கு வரமுடி யாது அதனால் கண்காணாமல் வாழ்வதே நன்று எனவும் கூறினார்.

இந்த எண்ணம் பல அகதி மக்களிடம் உள்ளது. இதனால் அந்த பத்துக்கு பத்து அறையில் தங்கள் எதிர்காலத்தை நினைத்து ஏக்கத்துடன் முகாம்களில் வாழ்கின்றனர்.

- அருள்-விஜயன்

# அநாவசியமான பிரச்சினைகளை எழுப்பிக் குழப்ப வேண்டாம்!

*- கல்விமான்கள்*

தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஒற்றுமையாக ஒரே குரலில் தமிழர் பிரச்சினை குறித்து அரசாங்கத்தரப் பினருடன் விட்டுக் கொடுக்கும் மனப் பான்மையுடன் யதார்த்தபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தினால் நிச்சயம் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவைப் பெறமுடியும் என்ற கருத்தை தமிழ் மக்களும் தமிழ் அறிஞர்களும், சிங்கள கல்விமான்க ளும் வலியுறுத்தி வருகிறார்கள். கடநத மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமாக தமிழ் மக்களை ஆறாத்துயரத்தில் ஆழ்த்தி வரும் இனப் பிரச்சினைக்கு இனிமேலும் காலதாமதமாகாமல் தீர் வொன்றை ஏற்படுத்துவதற்கு தமிழ்க் கட்சிகள் அனைத்தும் கருத்து மோதல் களையும், அபிப்பிராய பேதங்களையும் மறந்து ஓரணியில் குரல் கொடுத்து செயற்பட வேண்டுமென்று தமிழ் கல்வி மான்களும், நாட்டின் மீது பற்றுள்ள மற்ற இனங்களைச் சேர்ந்தவர்களும் விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

சாதாரண மொழிப் பிரச்சினையாக ஆரம்பித்த தமிழர் பிரச்சினை ஒரு புற்று நோயைப் போன்று, கொடிய வேகத்தில் பரவி இறுதியில் பயங்கர வாதம் மற்றும் ஆயுதப் போராட்டத் திற்கு அப்பாவி தமிழ் மக்களை தள்ளி இறுதியில் உரிமை எதுவும் பெற முடியாத நிலையில் தமிழ் மக்களில் பலரும் உயிரிழப்பையும் பொருள் இழப்பையும் சந்தித்து வேதனை வடுக்களுடன் இன்று வாழ்கின்றனர்.

1956 ஆம் ஆண்டில் அன்றைய பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவும், இலங்கைத் தமி ழரசுக் கட்சியின் தலைவர் எஸ். ஜே.வி. செல்வநாயகமும் இந்தப் பிரச்சி னைக்கு சுமுகத்தீர்வை ஏற்படுத்துவ தற்காக பண்டா - செல்வா ஒப்பந் தத்தை கைச்சாத்திட்டனர்.

அவ்வொப்பந்தத்தில் இப்போது இருக்கும் மாகாண, பிரதேச சபை களுக்கு இருப்பதை விட மிக்க குறைந்த அளவிலான அதிகாரமே கொடுக்கப் பட்டிருந்தது. அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவராக இருந்து அரசியல் அதிகாரத்தை பெறவேண்டு மென்ற குறுக்கு வழியில் செயற்பட்ட ஜே.ஆர். ஜயவர்தன, நாட்டைப் பற் றியோ, மக்களின் ஐக்கியத்தைப் பற் றியோ சிறிதேனும் சிந்திக்காமல் இவ் வொப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்ப தற்காக கண்டிக்கு பாதயாத்திரை மேற்கொண்டார்.

அதையடுத்து பிரதம மந்திரி பண் டாரநாயக்கவுக்கு பௌத்த பிக்குமாரி டம் இருந்து அதிக அழுத்தங்கள் ஏற்பட ஆரம்பித்ததனால் ஜனநாயக வாதியாக இருந்த போதிலும் பண்டார நாயக்கவிடம் தாம் நினைத்ததை சாதிகக வேண்டுமென்ற மனோ தைரியம் இல்லாத காரணத்தினால் அவர் புத்தரகித்த தேரர் போன்ற பௌத்த தலைவர்களினதும், சிங்கள இனவாதிகளினதும் அழுத்தங்களுக்கு அடிமையாகி பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார். அன்றிலிருந்து புரையோடிய தமிழ் மக்களின் உணர்வுகள் சிறிது சிறி தாக வலுப்பெற ஆரம்பித்து 1958 ஆம ஆண்டு இனக்கலவரத்துடன் இரு இனங்களுக்கிடையிலான பகைமை மற்றும் வெறுப்புணர்வு வலுவூனறியது.


இத்தகைய சூழ்நிலையில் சிங் களத் தலைவர்கள் தங்களுக்கு சிங் கள மக்கள் மத்தியில் இருக்கும் ஆதரவை தக்கவைத்துக் கொள்வ தற்காக தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வொன்றை ஏற்படுத்த தயக்கம் காட்டினார்கள். அது போலவே தமிழ்த் தலைவர்களும் இதனையொரு அரசியல் பிரசாரத் திற்கு ஆயுதமாக வைத்து அடுத்த டுத்து வரும் தேர்தல்களில் தங்கள் கட்சி நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட வேண்டுமென்ற குறுகிய நோக்கத்துடன் இனப்பிரச்சினைக்கு விட்டுக்கொடுப்புடன் பேசித்தீர்க்க உடன்படவில்லை. இதனால் ஏற்பட்ட படுபயங்கரமான பக்கவிளைவாக பயங்கரவாதமும், ஆயுதப் போராட்டமும் விஸ்வரூபம் எடுத்து இந்நாட்டிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவருக்குமே பேரிழப்பை ஏற்படுத்தியது.

அநாவசியமான பிரச்சினைகளை எழுப்பாமல் ஒன்றிணைந்து, ஒற்று மையாக செயற்பட வேண்டுமென்று தமிழ் அறிஞர்களும், ஏனைய சமூகங்க ளைச் சேர்ந்த கல்விமான்களும் விருப்பம் தெரிவித்துள்ளார்கள். பாராளுமன்ற தெரிவுக் குழுவின் மூலம் தமிழர் பிரச்சினைக்கு குறிப் பாக சிறுபான்மை பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வொன்றை ஏற்படுத்த வேண்டுமாயின், சிங்களத் தலைவர்களுக்கு அநாவசியமான அழுத்தங்களை கொண்டுவராமல் நியாயபூர்வமாக அவர்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி பிரச்சினை யைத் தீர்ப்பதற்கு ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொள்வது அவசியமாகும்.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்ப தற்கு முன்னரே அரசாங்கம், தமிழர் பிரச்சினைக்கு தீர்வை ஏற்படுத்தப் போவதில்லை. காலதாமதப்படுத்து கிறது என்றெல்லாம் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் சுமத்திய அதே குற்றச்சாட்டுகளை சுமத்து வதற்கு முன்னர் அரசாங்கத்தினால் தனது சிங்கள ஆதரவையும் தக்க வைத்துக் கொள்ளக்கூடிய நியாய மான தீர்வொன்றை சிறுபான்மை யோர் விடயத்தில் ஏற்படுத்துவதற்கு தமிழ் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்ற விருப்பம் இன்று தமிழ் மக்கள் மத்தியிலும், தமிழ் அறிஞர்கள், சிங்கள அறிஞர்கள் மத்தியிலும் வலுப்பெற்று வருகின்றது.

*- இணையத்திலிருந்து...*

# மீன் பிடித்து சாப்பிட வைக்கும் ஹோட்டல்



“பசியால் வாடுபவனுக்கு ஒரு வேளை உணவு கொடுப்பதை விட, மீன் பிடிக்கக் கற்றுக் கொடுத்தால், வாழ்நாள் முழுவதும் அவன் நிம்மதியாக சாப்பிடுவான்...'' என, மாவோ சே துங் சொல்லியதாக சீனப் பழமொழி ஒன்று உண்டு. இதை அப்படியே கடைப்பிடிக்கிறது, ஜப்பானில் உள்ள ஜவோ என்ற ஹோட்டல்.

இந்த ஹோட்டலை நடத்துபவர்கள், டோக்கியோ உள்ளிட்ட பல இடங்களில் ஹோட்டல்கள் வைத்திருக்கிறார்கள். இவர்களது எல்லா ஹோட்டல்களிலும், மிகப் பிரமாண்டமான மீன் தொட்டிகளை அமைத்து, அவற்றில் பல்வேறு வகையான மீன்களை வளர்க்கின்ற னர். மீன் தொட்டிகளுக்கு அருகிலேயே, மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட படகுகள் நிறுத்தப்பட்டுள்ளன. இந்தப் பட்குகளில், ஹோட்டலில் இருப்பது போன்ற சாப்பாட்டு மேசைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

ஹோட்டலுக்கு சாப்பிட வருபவர்களுக்கு, ஒரு தூண்டிலும், அதில் மாட்டி மீன்பிடிப்பதற்கான இரையும் கொடுக்கப்படுகிறது. படகில் அமர்ந்தபடி, அருகில் உளள தொட்டிகளுக்குள் தூண்டிலைப் போட்டு, காத்திருக்க வேண்டியது தான். தூண்டிலில் மீன் மாட்டியவுடன், ஹோட்டல் பணியாளர் வேகமாக வருவார். நீங்கள் பிடித்த மீனை, “கறியாக்க வேண்டுமா, பொரிக்க வேண்டுமா?” என கேட்பார். அவரிடம் உங்கள் தேவையை தெரிவித்து விட்டால், அடுத்த சில நிமிடங்களில், சுடச்சுட, சுவையாக தயாரிக்கப்பட்ட மீன், உங்கள் மேசைக்கு வந்து விடும்.

அதைச் சாப்பிட்டு முடித்ததும், அடுத்த மீனை பிடிக்கச் சென்று விடலாம். மீன் வகைகளைப் பொறுத்து, கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதிகமாக மீன் பிடிக்கும் வாடிக்கையாளர்களுக்கு, தள்ளுபடியும் உண்டு.

# மரணித்தவர்களை வைத்துச் செய்யும் அரசியல்

வரலாறு தெரிந்த காலம் முதல் வளரும் தலைமுறை சமூகவிரோதச் சிந்தனை அனைத்தையுமே நியாயமான வாழ்க்கை முறை என்று கேட்டே முதுமை கொள்கிறது. பெரும் வியாபார நிறுவனங்களின் கொள்ளையை நயம் மிக்க வியாபாரத் தந்திரம் என்று விதந்து போகிறார்கள். அத் திருட்டுக்கள் சமூகத்தின் பொதுச் சிந்தனையாகிவிட்டது. அளவுக்கு அதிகமான நுகர்வையும் ஆடம்பரக் கொள்வனவையும் திறமை என்கிறார்கள். இவ்வாறான வரையறைக்குள் சமூகத்தைப் பேணிக் கொள்ளும் அரசியலையே ஜனநாயகம் என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் ஈழ விடுதலைப் போராட்டம் ஆயுதங்களை மட்டுமே நம்பியிருக்கும் வன்முறை செயற்பாடாக மாற்றமடைந்த போது கூட ஒடுக்குமுறை உருவாக்கிய சமூகத்தின் சிந்தனை தனது எல்லையை வரையறுத்திருந்தது.

துரோகிகள் என்று ஒரு பகுதியாகவும் தியாகிகள் என்று இன்னொரு பகுதியாகவும் சமூகம் பிளவுற்றது. அரசியல் அடிப்படை, தத்துவார்த்தப் பின்புலம், கருத்து என்பன எல்லாவற்றிற்கும் அப்பால் பலம் மிக்கவர்களாக இனம்காணப்பட்டவர்கள் பொதுவாகத் தியாகிகளாகக் கருதப்பட்டனர். வலிமை குன்றிய ஆனால் மாற்று அரசியலை முன்வைத்தவர்கள் துரோகிகள் வரை தரம் தாழ்த்தப்பட்டனர்.

சமூக வழக்காயிருந்த இவ்வாறான கருத்தும் சிந்தனையும் பொதுவாக யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்தின் வாழ்க்கை முறையிலிருந்தே உருவானது. வெளிப்படையாகத் தெரிகின்ற பலம் என்பதே அங்கு முக்கியத்துவப்படுத்தப்பட்டது. அந்தப் பலத்தை அடைவதற்கு அயோக்கியர்கள் கூடத் தகுதியானவர்களாகக் கருதப்பட்டனர்.



அறுபது வீதத்திற்கு மேலாக நில உடமை யாளர்களாகவோ, நிர்வாக உத்தியோகத்தர்க ளாகவோ காணப்பட்ட யாழ்ப்பாணம் சார்ந்தே தமிழ்த் தேசியத்தினது கருத்தியலும் சிந்தனையும் உருப்பெற்றது.

இக்கருத்தியலின் பிரதிநிதிகளாக உருவான விடுதலை இயக்கங்கள் சமூகத்தோடு தம்மை இசைவாக்கம் அடையச் செய்து கொள்வதற் கான வழிமுறைகளைக் கையாண்டனர்.

- பலமானவர்கள் என நிறுவிக்கொள்ள ஏதாவது ஒரு வழியில் உறுப்பினர்கள் அல்லது ஆதரவாளர்களை இணைத்துக் கொண்டனர்.
- தாம் சார்ந்த இயக்கத்தை சுற்றி “நாம்” என்ற கருத்து விதைக்கப்பட்டது.
- ஒவ்வொரு “நாம்” இற்கும் மற்றவர்கள் துரோகிகளாக இனம் காட்டப்பட்டனர்.
- தமது குறுகிய வரலாற்றை ஊதிப் பெருப்பித்து தம்மை பலமானவர்களாகவும் தகுதியானவர்களாகவும் காட்ட முற்பட்டனர்.
- யாராவது மரணமடைந்தால் அதன் அனுதாப அலையை நீட்டிப் பெருப்பித்து இலாபகரமான அரசியலாக்கிக்கொண்டனர்.

புலம்பெயர் நாடுகளில் இயக்கங்கள் கையாண்ட அதே வழிமுறைகளை இப்போது அங்குள்ள வியாபாரிகள் கையாள்கிறார்களா என்ற சந்தேகம் முளைவிடுகிறது.

இதில் இரண்டு வகையான மனித வியாபாரிகளைப் பார்க்கின்றோம்.

முதலாவதாக புலிசார் பிரமுகர்கள் இரண்டாவதாக புலி எதிர்ப்புப் பிரமுகர்கள்.

புலிசார் பிரமுகர்கள் நடுவே பிளவுகளைக் காண்கிறோம். இவர்கள் தமக்கு இடையே சண்டை போட்டுக் கொள்கிறார்கள். இதுவரை இலங்கையரசின் அடக்குமுறைக்கு எதிராகப் போராடி மரணித்துப் போனவர்களை வைத்தே இவர்களின் அரசியல் நடைபெறுகிறது.

பிரபாகரன் கொலை செய்யப்பட்டது கூட இவர்களுக்குத் தெரியும். இன்னும் பிரபாகரன் இருக கிறார் என்று, குறைந்தபட்ச அஞ்சலி பிரசுரம் கூட விட மறுக்கும் இவர்களின் வியாபாரத்திற்கு பிரபாகரன் பயன்பட்டுப் போகிறார். அதில் வேறு தேசியத் தலைவர் என்று வரிக்கு வரி கூறும் இவர்களின் அயோக்கியத்தனத்தை ஈழத்தில் மரணத்துள் வாழும் மக்கள் அருவருப்பாகத் தான் பார்கிறார்கள்.

உணவும் உறக்கமும் இன்றி போராடி இறந்து போன அப்பாவிகளின் படங்களை வைத்து இவர்கள் ஆடம்பரமாகக் கொண்டாடும் மாவீரர் தினத்தில் மட்டும் பசிக்காக எத்தனை பெண கள் உடலை விற்கிறார்கள்? எத்தனை பிஞ்சுகள் பசித்த வயிற்றோடு கண்ணீர் வடிக்கிறார்கள்??


*- சுதர்சன் கட்டுரையிலிருந்து.....*

# உரிமையை விட்டுக்கொடுக்காதாம் தமிழகம்

(சென்னை)

முல்லைப் பெரியாறு பிரச்சினையில், தமிழகம் தனக்குள்ள உரிமையை ஒருபோதும் விட்டுக் கொடுக்காது என்று தமிழக சட்டப்பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை தொடர்பாக விவாதிக்க நேற்றுமுன்தினம் காலை 11 மணிக்கு தமிழக சட்டப்பேரவையின் சிறப்பு கூட்டம் கூடியது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 120 அடியாக குறைக்க வேண்டும் என்று கடந்த 9ஆம் திகதி கேரள சட்டப்பேரவையில் தீர்மானம் இயற்றியுள்ள கேரள அரசு வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும். உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஏற்று, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கு ஏதுவாக, 2006ஆம் ஆண்டு, கேரள பாசன மற்றும்



நீர்ப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டத்தில் உரிய திருத்தங்களை கேரள அரசு மேற்கொள்ள வேண்டும்.

அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த, எஞ்சியுள்ள நீண்டகால அணைப் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள கேரள அரசு, தமிழகத்திற்கு தடை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும், தமிழகம் தனக்குள்ள உரிமையை விட்டுக் கொடுக்காது என்றும் தமிழக சட்டப்பேரவை தீர்மானிக்கிறது.

இவ்வாறு தமிழக சட்டப் பேரவையில் தீர்மானத்தை முதல்வர் ஜெயலலிதா வாசித்தார். அனைத்து கட்சி தலைவர்களும் தீர்மானத்தை ஆதரித்து பேசினர். முதல்வர் ஜெயலலிதாவின் பதிலுரைக்கு பின்னர் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

# முல்லைப் பேராறு பிரச்சினை மக்களின் கடைகள் உடைப்பு

(சென்னை)

முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக தமிழகத்தில் பதட்டம் ஓயாத நிலையில், கேரளத்தைச் சேர்ந்தவர்களின் வர்த்தக நிலையங்களின் மீதான தாக்குதல்கள் தொடர்கின்றன. மதுரை, ஈரோடு, ஆகிய இடங்களில் உளள வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்டுள்ளன. மதுரையில் உள்ள கேரளத்தவரின் நிறுவனங்கள் முழுவதையும் பாதுகாப்புக் கருதி மூட உத்தரவிட வேண்டும் என மாவட்ட அதிகாரிகளிடம்புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் விரட்டப்பட்டு தமிழகம் நோக்கி வருகின்றார்கள் என்ற செய்தி மதுரையில் ஏற்படுத்திய தாக்கமே கேரளத்தவரின் நிறுவனங்கள் மீதான தாக்குதலைத் தொடக்கியது. கேரளாவில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களில் சிலர் தேவாரம் பகுதிக்கு வந்தனர். அவர்களுக்கு அங்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்தச் செய்தி, பரச்சினையை மேலும் பெரிதாககியது.

கேரளத்தவருக்குச் சொந்தமாக மதுரையிலுள்ள பெரியகடைகள் மற்றும் நிறுவனங்களுக்கு




ஏற்கனவே பாதுகாப்புக் கொடுககப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் பாதுகாப்புத் தாக்குதல்களை தடுத்து நிறுத்தும் அளவில் இல்லை என்பது உண்மை. இந்தத் தாக்குதல்களையடுத்து, ஈரோடில் உள்ள பெரும்பாலான கேரளத்தவரின் கடைகள் நேற்றுமுன்தினம் முழுநாளும் மூடப்பட்டிருந்தன.

# குளிரால் உண்ணாவிரதம் இடமாற்றம்

(டில்லி)

டில்லியில் கடும் குளிர் நிலவுவதால் அன்னா ஹசாரே தனது அடுத்த கட்ட உண்ணாவிரதப் போராட்டத்தை மும்பைக்கு மாற்ற முடிவு செய்திருப்பதாக அவரது குழுவினர் தெரிவித்துள்ளனர்.

வலுவான லோக்பால் மசோதாவை நிறைவேற்ற வலியுறுத்தி சமூக சேவகர் அன்னா ஹசாரே வரும் டிசம்பர் 27ஆம் திகதி முதல் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளார். இதற்காக புதுடில்லியில் உள்ள ராம்லீலா மைதானம் அனுமதி பெறப்பட்டிருந்தது. இந்த நிலையில் டில்லியில் கடும் குளிர் நிலவுகிறது.

இதனையடுத்து டில்லியில் நடைபெற இருந்த போராட்டத்தை மும்பைக்கு மாற்ற முடிவு செய்திருப்பதாக அன்னா ஹசாரே குழுவினர் தெரிவித்துள்ளனர். உண்ணாவிரதப் போராட்டம் மும்பைக்கு மாற்றப்படும் பட்சத்தில் அங்கு இருக்கும் ஆசாத் மைதானத்தை போராட்டத்திற்காக அனுமதி பெற முடிவு செய்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# வடிவேலு மீது கொலைப் பழி

(சென்னை)



நடிகர் வடிவேலு மீது கொலை வழக்குப் பதிவுசெய்ய உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மதுரையைச் சேர்ந்த பாண்டீஸ்வரி என்பவர் சென்னை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனுவில், எனது கணவர் வேலுச்சாமி, நடிகர் ராஜ்கிரணிடம் முதலில் பணியாற்றினார்.

அப்போது நடிகர் வடிவேலுவை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அதன்பின், வடிவேலுக்கு நிறைய சினிமா வாய்ப்புகள் கிடைத்தன. வடிவேலுவிடம் முகாமையாளாராக வேலைக்குச் சேர்ந்த என் கணவர், 2009 இல் தற்கொலை செய்து கொண்டார். பிரேதப் பரிசோதனை செய்யாமல் அவரது உடலை அடக்கம் செய்துவிட்டனர். இதில் மர்மம் இருக்கிறது.

இதுகுறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும் என மனுவில் பாண்டீஸ்வரி கூறியிருந்தார். இந்த வழக்கை நீதிபதி போல் வசந்தகுமார் விசாரித்து, உள்துறை செயலர், டி.ஜி.பி. ஒரு வாரத்தில் பதில் மனுத் தாக்கல் செய்ய கடிதம் அனுப்ப உத்தரவிட்டார்.




இந்த குறியீட்டைப் பார்த்து ஆஹா, ஓஹோ, பிரமாதம், சாதிச்சுட்டோம்...னு எல்லோரும் பெருமைப் பட்டதை பார்த்து நான் கூட ரூபாயோட மதிப்பு, மரியாதை எல்லாம் நிஜமாவே ஏறிப் போச்சுதுன்னு நினைச்சு ஏமாந்து போய்ட்டேங்க..!



# அரசியல் செல்வாக்கை வைத்து வழக்கை கழற்றினார் சிதம்பரம்

(புதுடில்லி)

ஹோட்டல் அதிபர் குப்தா மீது, டில்லி பொலிஸாரால் தொடரப்பட்ட மோசடி வழக்கில் அவரது வழக்கறிஞராக மத்திய அமைச்சராகப் பதவியேற்பதற்கு முன் சிதம்பரம் ஆஜராகியுள்ளார். அவ்வழக்குகள் உள்துறை அமைச்சகத்தின் நிர்பந்தத்தின் பேரில், வாபஸ் பெறப்பட்டன என டில்லியிலிருந்து வெளியாகும் நாளிதழ் ஒன்றில், செய்தி வெளியாகி இருந்தது.

இந்தக் குற்றபத்திரிகை சிதம்பரத்தின் உத்தரவின் பேரில் தான் வாபஸ் பெறப்பட்டது என்றும், தங்களிடம் ஆதாரம் இருப்பதாகவும், அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன்மூலம், தன் பதவியை துஷ்பிரயோகம் செய்த அவர், அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும் என, லோக்சபாவில், அ.தி.மு.க. மற்றும் பா.ஜ. உறுப்பினர்கள் கோஷங்கள் எழுப்பியதால், நேற்றுமுன்தினம் நாள் முழுவதற்கும், சபை ஒத்திவைக்கப்பட்டது.

குப்தா, மறைந்த பிரதமர்கள் இந்திரா, ராஜிவ் பெயர்களில் சோனியாவை தலைவராக வைத்து ஒரு அறக்கட்டளையும் நடத்தி வந்தார்.

# டொலர் பெறுமதி குறையாமலிருக்க ஆலயத்தில் சிறப்புப் பூஜை

ஹைதராபாத் நகரிலிருந்து மேற்கே 35 கி.மீ. தொலைவில் அசில்கூர் பாலாஜி ஆலயம் உள்ளது. இது "அமெரிக்க விசா ஆலயம்" என்ற பெயரில் அறியப்பட்டுள்ள இந்த ஆலயத்தில் வழிபாடு செய்தால, விரைவில் அமெரிக்க விசா கிட்டும் என்ற



நம்பிக்கை இருப் பதால், விசா ஆலயத்தில் எப்போ தும் கூட்டம் இருக்கும்.

தற்போது உலக பொருளாதாரம் பின்னடைவு நிலையில் இருப்பதால், விசா எடுத்து அமெரிக்கா செல்ல விரும்பும் பக்தர்கள் அமெரிக்க டொலர் தொடர்பாக கவலையுற்று உள்ளார்கள் என்ற காரணத்தால் நேற்றுமுன்தினம், முழுநாள் சிறப்புப் பூஜை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உலகப் பொருளாதார பின்னடைவு காரணமாக, அமெரிக்க டொலர்-இந்திய ரூபா நாணய மாற்று விகிதம் கீழே போகாமல் இருக்க நடத்தப்படும் பூஜை இது என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

இவ்வாலயம் பற்றி அமெரிக்காவின் புகழ்பெற்ற வர்த்தகப் பத்திரிகை 2007ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி செய்தி வெளியிட்டு இருந்தது. ஆலயத்தில் வழிபாடு செய்து அமெரிக்க விசா கிடைக்கப் பெற்றவர்களின் பட்டியல், ஆலய நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இதேபோல் கொழும்பு ஜ.பி.சி. வீதியில் விசாப்பிள்ளையார் என்று ஓரப் பிள்ளையார் இருப்பது கொழும்புக்குச் சென்று வருவர்கள் அறிந் திருப்பார்கள்.

# பக்தர்களுக்கு பாகுபாடு காட்டும் தெய்வ சன்நிதானங்கள்

(சேலம்)

சேலம் அம்மாபேட்டையில் தனியார் கோயிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் நுழையக்கூடாது என திடீர் தடை விதிக்கப்பட்டுள்ளது. சேலம் அம்மாபேட்டை கிருஷ்ணா நகரில் சீதா இராமச்சந்திரமூர்த்தி தேவஸ்தானத்துக்கு சொந்தமான இராமர் கோயில் உள்ளது. 1986ஆம் ஆண்டில் இந்தக் கோயில் கட்டப்பட்டது. கிருஷ்ணா நகர், வித்யா நகர், பச்சப்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்நத அனைத்து சமூகத்தினரும் வழிபட்டு வந்த நிலையில், திடீரென்று நேற்றுமுன்தினம் முதல் பச்சப்பட்டியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் கோயிலுக்குள் நுழையக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டது.

இது குறித்த அறிவித்தல் கோயில் கதவுகளில் ஒட்டப்பட்டு உள்ளது. இது தொடர்பாக மறு தீர்மானம் நிறைவேறும் வரை கோயில் கதவு சாத்தப்படுகிறது என்றும் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. கோயில் நிர்வாகத்தின் திடீர் முடிவால், தாழ்த்தப்பட்ட மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். அப்பகுதியைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் கோயில் முன் திரண்டுவந்து தேவஸ்தான நிர்வாகிகளைக் கண்டித்து கோஷம் போட்டனர். தடை அறிவிப்பை இரத்துச் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத் தினர்.

இதுகுறித்து பச்சப்பட்டியைச் சேர்ந்த சித்ரா, சீரங்காயி, சுகுணா, ஜானகிராமன் ஆகியோர் கூறியதாவது, இத்தனை ஆண்டுகளாக அனைத்து மக்களும் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட்டு வந்தனர். கோயில் விரிவாக்கப் பணிகளுக்காக எங்களிடமும் நன்கொடை வசூலித்துள்ளனர். இந்நிலையில், தாழ்த்தப்பட்ட மக்கள் கோயிலுக்குள் வரக் கூடாது என்பது சாதி மோதலை உருவாக்குவது போல உள்ளது. நிர்வாகத்தினர் இந்த முடிவை வாபஸ் பெற வேண்டும். இல்லாவிட்டால் போராட்டம் நடத்துவோம். என அவர்கள் தெரிவித்துள்ளனர்

# முல்லைப் பேராறு விவகாரம் ஐயப்ப பக்தர்கள் பற்றிக் கவலை

(சபரிமலை)

சபரிமலை சீசனை சீர்குலைக்க சதி நடப்பதாகவும், இந்த விடயத்தில் இரு மாநில அரசுகளும் போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பா.ஜ. கோரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து சன்னிதானத்தில் பா.ஜ. தேசிய செயற்குழு உறுப்பினரும், முன்னாள் மாநில தலைவருமான பி.கே.கிருஷ்ணதாஸ் கூறியதாவது:

அண்மைக் காலமாக கேரள-தமிழ்நாடு எல்லையில் நடைபெற்று வரும் சம்பவங்களும், அது தொடர்பாக வெளிவரும் செய்திகளும் வெளிமாநிலங்களில் இருந்து வரும் பக்தர்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. இதை மாற்றுவதற்கு கேரள அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இப்போது பாலக்காடு வழியாக மட்டுமே பக்தர்கள் வருகின்றனர். இதர வழிகளில் வரும் பக்தர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது.

பத்தணந்திட்டை மாவட்டத்தில் கூட சில இடங்களில் ஐயப்ப



பக்தர்களின் வாகனங்கள் மீது கல் வீசப் பட்டுள்ளது. முல்லைப்பெரியாறு பிரச்சினையை முன்னிறுத்தி, சிலர் சபரிமலை சீசனை சீர்குலைக்க முயற்சி செய்கின்றனர். இவர்கள் யார் என்பதை கண்டறிய, கேரள அரசு விசாரணை நடத்த வேண்டும்.

சபரிமலை பணிகளில் துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு இல்லை. இதனால், பல பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சபரிமலை பிரதான செயற்திட்டம் செயல்படுத்த முடியவில்லை.

எனவே, சபரிமலை அபிவிருத்திக் குழு என்ற அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அந்த அமைப்பின் கீழ், சபரிமலை பணிகளை மேற்கொள்ள வேண்டும். தேவசம்போர்டு வசம் உள்ள 650 கோடி ரூபாயை பக்தர்களின் வசதிக்காக பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# இப்படியும் முஸ்லீம்களைப் புண்படுத்தலாம்



(லண்டன்)

உலகப் புகழ் பெற்ற பல்கலை கழகங்களில் ஒன்றான கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழம் அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் முஸ்லீம்களுடன் கை குலுக்க வேண்டாம் என்று உத்தர விட்டது. இவ் அறிவிப்பு கல்வியா ளர்களிடையே கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் நிர்வா கம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் கை குலுக்கும் போது பதில் கை குலுக்கல் சரியில்லாமல் போனால் சில மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாவார்கள் என்ப தாலேயே முஸ்லீம்களிடம் கை குலுக்காமல் அதை உடல் மொழியாலே வெளிப்படுத்த உத்தரவிட்டதாக விளக்கியுள்ளது. ஆனால் இவ்வுத்தரவை கேம்பிரிட்ஜ் கல்வியாளர்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர். ஒன்றும் தெரி யாதவர்கள் அல்ல தாங்கள் என்றும், எந்த மன நிலையில் யாருக்கு கை குலுக்க வேண்டும், யாருக்கு கை குலுக்க வேண் டாம் என்பதை முடிவு செய்யும் திறன் தமக்கு இருப்பதாகவும் இச்சாதாரண விஷ யத்தை அதிகாரபூர்வ சுற்றறிக்கையை வெளி யிடுவது ஒருவரை பேட்டி காண்பதையே சங்கடத்துக்குள்ளாகி பிரச்னையை பூதகார மாக்கி உள்ளது என்று கண்டித்துள்ளனர்.

# 3000பேரை தேடும் மலேசியாப் பொலிஸார்



(கோலாலம்பூர்)

மலேசிய அரசு, குடியேற்ற விதிமுறைகளை கடுமையாக்கியுள்ளது. கைரேகை பதிவின் மூலம், வெளிநாட்டவர்களின் தகவல்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

மலேசிய குடியுரிமைதுறை அதிகாரிகள் குறிப்பிடுகையில், தோட்ட தொழி லாளர்கள், ஹோட்டல் வேலை செய்பவர்கள், தகவல் தொழில் நுட்ப வல்லுனர்கள் என, மலே சியாவில் பணிபுரியும் வெளி நாட்டினரில் பலர், பல்வேறு பெயர களில் பாஸ்போர்ட் மற்றும் விசா வைத்துள்ளனர். இன்னும் பலர், தங்கள் சொந்த நாட்டில் குற் றம் செய்து விட்டு, மலேசியா வில் வேறு பெயர்களில் நட மாடி வருகின்றனர். இது போன்ற பின்னணி உடைய, 3 ஆயிரம் பேரை கண்டறிந்துள்ளோம். அவர்களை தேடும் பணி நடக் கிறது. இதற்காக, சர்வதேச பொலிஸாரின் உதவியையும் கோரியுள்ளோம் எனத் தெரி வித்துள்ளனர்.

# ரஷ்யாவில் தேர்தலுக்குப் பின்னரான குழப்பம் அமெரிக்காவை குற்றஞ்சாட்டுகின்றார் புட்டின்




(மொஸ்கோ)

மக்கள் ஆதரவுடன் கடந்த 12 ஆண் டுகளாக ஆட்சி நடத்தி வருகிறோம். அரசின் கொள்கை, செயல்பாடு எதிலா வது தவறு இருந்திருந்தால் இதுவரை ஏன் எதிர்ப்பு எழவில்லை. இப்போது தேர்தல் முடிந்து மீண்டும் பெரும் பான்மை பெற்ற ஒரு ஆட்சிக்கு எதிராக எப்படி திடீரென கிளர்ச்சி வந்தது? எனவே, அதில் வெளிநாட்டு சதி இருப் பதாக நினைக்கிறேன்.

என ரஷ்ய அதிபர் புட்டின் தெரிவித் தார். ரிவியில் நேரடி உரையாடல் நிகழ்ச் சியில் பங்கேற்று மக்களின் கேள்வி களுக்கு விரிவாக பதில்அளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அமெரிக்காவின் வலையில் எதிர்க்கட்சி கள் விழுந்து விட்டதால், அப்பாவி ரஷ் யர்களை கிளர்ச்சி செய்ய தூண்டி வரு வதாக பூட்டின் குற்றம் சாட்டினார். மறு தேர்தல் நடத்துவது உட்பட எதிர்க் கட்சிகளின் கோரிக்கைகளை நிராகரிக் கிறேன். எனக்கு உண்மையிலேயே ரஷ் யர்களிடம் ஆதரவு இல்லை என்று தெரிந்தால் ஒருநாள் கூட பதவியில் நீடிக்க மாட்டேன். விலகத் தயாராக இருக்கிறேன். இவ்வாறு புட்டின் தெரி வித்தார்.

ரஷ்யாவில் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில் ஆளும் கட்சி பெரும்பான்மை பெற்றது. எனினும், கடந்த தேர்தலை விட வாக்கு சதவீதமும், ஆசன எண் ணிக்கையும் குறைந்தது. அத்துடன் தேர் தலில் முறைகேடுகள் தலைவிரித்து ஆடியதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதனால், தலைநகர் மொஸ்கோவில் பல லட்சம் பேர் திரண்டு போராட்டம் நடத்தினர். ரஷ்ய அரசியலில் பல ஆண் டுகளுக்கு பிறகு நடந்த இந்தக் கிளர்ச்சி, உலகின் கவனத்தை கவர்ந்தது. இதற் கிடையே, தேர்தலுக்கு நடந்த கருத்து கணிப்பில் புட்டினுக்கு மக்கள் ஆதரவு 60 சதவீதத்தில் இருந்து 35 சதவீதமாக குறைந்ததாக கூறப்பட்டது.





# படகு விபத்தில் 20 பேர் பலி

(அபுஜா)

நைஜீரியாவில் நடந்த படகு விபத் தில், 20 க்கும் அதிகமானவர்கள் பலியா கினர். நைஜீரியாவின் தெற்கு பகுதியில் உள்ள ஈகிள் தீவிலிருந்து மெக்புடோ கியா என்ற இடத்திற்கு, படகில் 40க்கும் அதிகமான பயணிகள் கடந்த செவ்வாய்க்கிழமை பயணம் செய்தனர். திடீரென இந்தப் படகு ஆற்றில் கவிழ்ந் ததில், 20 க்கும் அதிகமானவர்கள் பலியா கினர். இதுவரை 20 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மூன்று பேர் காப் பாற்றப்பட்டு விட்டனர்.


# பிரான்ஸ் ஜனாதிபதி குற்றவாளி இப்போது நீதிமன்றம் தீர்ப்பு



பிரான்ஸின் முன்னாள் அதிபர் ஊழல் வழக்கில் குற்றவாளி என பிரெஞ்சு நீதிமன்ற மொன்று நேற்று முன்தினம் தீர்ப்பளித் துள்ளது. இவ்வழக்கில் ஒத்திவைக்கப்பட்ட இருவருட சிறைத்தண்டனையை அந்நீதிமன் றம் விதித்துள்ளது.

79 வயதான ஜக் சிராக் 1995 முதல் 2007 ஆம் ஆண்டுவரை பிரெஞ்சு ஜனாதிபதியாக பதவி வகித்தவர் ஆவார். இவர் 1977 முதல் 1995 ஆம் ஆண்டுவரை பாரிஸ் நகர மேயராக பதவி வகித்த காலத்தில் பொதுமக்கள் பணத்தை துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டார். இது தொடர்பான வழக்கிலேயே அவர் குற்றவாளியாக அறிவிக்கப் பட்டுள்ளார்.

# அமெரிக்காவின் மற்றொரு உளவு விமானமும் விழுந்தது



கிழக்கு ஆபிரிக்கக் கடலில் கொள்ளையர்களின் நடமாட்டங் களை உளவு பார்க்கும் அமெரிக்க உளவு விமானங்களில் ஒன்று வீழ்ந்து. சேஷல்ஸ் தீவில் உள்ள லன்வேயில் தரையிறங்குமுன் விமானம் வீழ்ந்து நொருங்கியுள் ளது. இது வழமையான ரோந்து நடவடிக்கையின் போது ஏற்பட்ட விபத்து என அமெரிக்கா அறிவித்துள்ளது.


அமெரிக்க ராணுவத்துக்குச் சொந்தமான MQ-9 Reaper ரக உளவு விமானம் விபத்துக்கு உள்ளானபோது, அதில் ஆயுதங்கள் ஏதும் பொருத்தப்பட்டு இருக்கவில்லை. விபத்தின் பின் ஏற்பட்ட தீ பின்பு அணைக்கப்பட்டது என தெரிவிக்கப் பட்டுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, உளவு விமானம் புறப் பட்டு சில நிமிடங்களில் இயந்திரக் கோளாறு ஏற்பட்ட சமிக் கைகள் கிடைத்ததை அடுத்து, விமானத்தை மீண்டும் தரை யிறக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த முயற்சி களின்போது விமானம் ஓடுபாதையில் வீழ்ந்து தீப்பற்றிக் கொண் டது எனத் தெரியவருகின்றது. விபத்து நடைபெற்றபின் சிறிது நேரத்துக்கு விமான நிலைய ரன்வே முற்றாக மூடப்பட்டு, அதன் பின் வர்த்தக விமான பாவனைக்காக திறக்கப்பட்டது.

# வாடகை வாகனச் சாரதிகளுக்கு அவுஸ்ரேலியாவில் சீருடை




அவுஸ்ரேலியாவில் வாடகை கார் வாகனச்சாரதிகள் போக்குவரத்துத் துறை பரிந்துரைத்துள்ள ஆடைகளையே அணிய வேண்டும். குறிப்பாக முறைப் படி வெட்டித் தைத்த ஆடைகளையே அணியவேண்டும். ரெடிமேட் துணிகளை தவிர்க்க வேண்டும். ஜீன்ஸ், விளை யாட்டு நேர உடைகளை வேலையின் போது அணியக் கூடாது. ஆனால் ஷாராம் போரோஜன்டே (வயது-44)என்பவர் ஜீன்ஸ் பேன்ட் அணிந்து டாக்ஸி ஓட்டிக் கொண் டார். வழக்கமான பொலீஸ் சோதன்னயின் போது ஷாராம் சிக்கி கொண்டார். அவர் மீது வழக்கு பதிவு செய்து 75 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தனர். இதற்கு ஷாராம் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். தான் அணிந்துள்ள பேன்ட் டெய்லர் தைத் ததுதான் என்று வாதாடினார். ஆனால் நீதிபதி அவருக்கு அபராதம் விதித்து தர்ப்பளித்தார். வேறு வழியின்றி பணத் தைக் கட்டிவிட்டு வெளியில் வந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த ஜனவரி மாதம் நடந் துள்ளது. இப்போதுதான் பெரும் பரபரப்பாக அஸ்ரேலியாவில் உலா வருகின்றது.



ஸ்பெயின் நாட்டில் இறைச்சிக்காக விலங்குகள் கொல்லப்படுவதை தடுக்கக் கோரியும், சைவ உணவினை வலியுறுத்தியும், பார்சிலோனா நகரில் விலங்குகள் நல அமைப்பைச் சேர்ந்த பெண் ஒருவர் நூதனப்போராட்டம் நடத்தி அனைவரின் கவனத்தை ஈர்த்தார்.

# கடற்றொழிலாளர்களுக்குள்ள தடைகள் அகற்றப்பட்டு தேவையற்ற சிரமங்கள் நீக்கப்பட வேண்டும்



**கடற்றொழில், நீரியல் வள அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு, யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆற்றிய உரை**

**கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே,**

வடக்கு கிழக்கு யுத்தத்துக்குப் பின்னர் இலங்கையின் மொத்த கடற்றொழில் வளர்ச்சியிலே குறிப்பாக வடமாகாணம் மிகவும் வேகமாக அதிக உச்ச வளர்ச்சியை எட்டியிருப்பதை இந்த அமைச்சின் புள்ளிவிபரங்களிலிருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது. வடக்கு கிழக்கிலே மீன்பிடித்துறையை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்பதற்காக கடந்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிலும், இந்த வருடத துக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிலும் இந்த அமைச்சுக்காக மிக அதிகளவிலான தொகைப்பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை நான் வரவேற்கின்றேன். இதன் மூலம் நீண்ட கால யுத்தத்தினால் அழிவு நிலைக்குச் சென்றுள்ள வடக்கு கிழக்கு கடற்றொழிலில் மேலும் வளர்ச்சியடையும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடியவாறான நிதி ஒதுக்கீடுகள் இம்முறையும் இவ் வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ளது.

இந்த அவையினூடாக மேலும் பல்வேறு தேவைகள் தொடர்பில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த விடயங்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

(சுமந்திரன் எம்.பி இடையீடு)

கௌரவ உறுப்பினர் அவர்களே, நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. நீங்கள் முதலில் கிரிக்கெற்றை விளையாடி முடித்துவிட்டு வாருங்கள். உங்களுக்குப் பக்கத்தில் இருப்பவருடன் கதைத்து முதலில் உள்வீட்டுப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டு பின்னர் எங்களுடன் கதைக்க வாருங்கள். First you solve the internal problems. பின்னர் அவருடன் கதைப்பதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காது. ஆனபடியால் இப்பொழுதே நீங்கள் அவருடன் கதைத்துக் கேளுங்கள்.

கடந்த யுத்த கால கட்டங்களில் கடற்றொழில் சமூகத்தினர் மிகப் பெரிய பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தார்கள். குறிப்பாக யுத்த காரணங்களினால் கடலில் மீன் பிடிப்பதற்கான அனுமதி தடைசெய்யப்பட்டிருந்த நிலையில் அவர்கள் மிகவும் துன்பியல் வாழ்கையையே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால் யுத்தத்துக்குப் பின்னர் தான் அவர்களுடைய வாழ்க்கையில் ஒளி ஏற்றப்பட்டது. அவர்கள் மீண்டும் சுதந்திரமாகக் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதற்கான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இருந்தாலும் அவ்வப்போது அந்தச் சூழலில் அவர்களுக்குச் சில தாக்கங்களும் ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. குறிப்பாக பாஸ் நடைமுறை மற்றும் மீன்பிடிப்பதற்கான நேரக் கட்டுப்பாடு போன்ற விடயங்கள் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கு மேலும தடைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. கடற்றொழிலாளர்களுக்குள்ள இந்தத் தடைகள் அகற்றப்பட வேண்டும், அவர்களுக்குள்ள தேவையற்ற சிரமங்கள் நீக்கப்பட வேண்டும்.

மீள்குடியேற்றப் பகுதிகளில் குறிப்பாக வன்னிப் பிரதேசங்களான முல்லைத்தீவு, கிளிநொச்சி மன்னார் மாவட்டங்களிலும், வடமராட்சி கிழக்கு மற்றும் மாதகல் போன்ற பகுதிகளிலும் மீள் குடியேற்றப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான வாழ்வாதார உதவிகள் தொடர்பாகவும் நான் இந்த அவையின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். உண்மையிலேயே கடற்றொழிலாளர்களின் வாழ்வாதார உதவிப் பெறுமதி என்பது மிகவும் அதிகமானது தான். அதனாலோ என்னவோ அரசாங்க உதவித்திட்டமாக இருந்தால் என்ன, நன்கொடை நிறுவனங்களின் உதவித் திட்டமாக இருந்தால் என்ன அந்த உதவித் திட்டங்கள் எல்லாக் கடற்றொழிலாளர்களுக்கும் சென்றடைவதில் பிரச்சினைகள் இருக்கின்றன.

குறிப்பாக ஆறு இலட்சம் வரையிலான நிதியுதவியைப் பெறுவதன் ஊடாகத்தான் அவர்கள் அந்த வாழ்வாதார உதவியைப் பெற்ற மாதிரி இருக்கும். இருந்தபோதிலும் இவ்வளவு பெறுமதியான வாழ்வாதார உதவியை கொடுப்பதற்கு முன்வருவது என்பது நடைமுறைப்பிரச்சினைகளை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதையும் நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். இதற்காகத் தான் உங்கள் அமைச்சு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இலகு கடன் அடிப்படையில் அதாவது கிட்டத்தட்ட 5 சதவீதமான இலகு வட்டிக் கடன் அடிப்படையில் வங்கிக் கடன்களை ஏற்பாடு செய்திருந்தது. ஆனால், அந்த விடயம் நடைமுறைப்படுத்தப்படும்போது அவர்களுக்கு உடனடியாக அந்தப் பயன் கிடைக்கக்கூடிய மாதிரியான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

குறிப்பாக ஏராளமான கடற்றொழிலாளர்கள் தங்களது கடற்றொழில் சங்கங்களுக்கு ஊடாக மற்றும் உதவிப் பணிப்பாளர்களின் சிபாரிசுகளுக்கு ஊடாக அந்த வங்கிக் கடன்களுக்காக விண்ணப்பித்திருக்கின்றார்கள். ஆனால், அந்தக் கடனை வழங்குவதில் வங்கிகள் தேவையற்ற கால தாமதங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டும்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இன்னும் கடற்றொழிலுக்காக அனுமதிக் கப்படாத கடற்றொழில் பிரதேசங்கள் இருக்கின்றன. கட்டைக்காட்டிலிருந்து சுண்டிக்குளம் வரையிலான பகுதிகளில் மீன்பிடிப்பதற்கான அனுமதி இன்னும் வழங்கப்படாத நிலைமைகள் இருக கின்றன. அது மட்டுமல்ல கடந்த காலங்களில் வடமராட்சி கிழக்கில் கடலோரப் பகுதிகளில் வாடிகளை அமைத்துத் தான் கடற்றொழிலாளர்கள் தங்களது மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார்கள். ஆனால், இப்போது அந்த அனுமதி கடற்படையினரால் மறுக்கப்படுகின்றது. நீண்ட தூரம் பயணம் செய்து கடற்கரைகளுக்குச் செல்வது கடினமாக இருப்பதனால்தான் அவர்கள் வாடி அமைக்கின்றார்கள். ஆனால், அவர்கள் வாடி அமைப்பதற்கு இன்று தடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையைப் போக்குவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிளாலி கடற்கரைப் பிரதேசத்தில் கிட்டத்தட்ட 20 ஏக்கர் நிலப் பரப்பு கடற்படை முகாம் அமைப்பதற்காகக் கடற்படையினரால் கோரப்பட்டிருக்கின்றது. ஆனால், அண்மையில் ஒரு மாதத்துக்கு முன்புதான் கிளாலிப் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் நடைபெற்றிருக்கின்றது. அந்த நிலைமையில் அந்தப் பிரதேசத்தில் 20 ஏக்கர் நிலம் இழக்கபடுவது என்பது அங்குள்ள கட்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மிகவும் பாதிக்கப்படக்கூடிய விடயம்.

அது மட்டுமல்ல அந்த 20 ஏக்கர் காணியின் பெரும் பகுதி நிலப்பரப்பு அங்குள்ள தேவாலயத்திற்குச் சொந்தமானது. இருந்தபோதிலும் இதனைச் சுவீகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிய முடிகின்றது. கிளாலியில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது. எனவே, நீங்கள் இவ்விடயத்தில் தலையிட்டு, தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென வலியுறுத்துகின்றேன்.

அவ்வாறே மாதகல் பிரதேசத்திலும் - கிட்டத்தட்ட 2.1 சதுர கிலோமீற்றர் பகுதியில் J-152 கிராமசேவையாளர் பிரிவில் - கடற்படைத் தளமொன்று அமைப்பதற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திடம் காணி கோரப்பட்டிருக்கின்றது. அண்மையில், இப்பகுதியில் 258 குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால், தற்பொழுது அவர்களுடைய மீள்குடியேற்றம் கேள்விக்குரியதாகியுள்ளது. கடந்த காலங்களில் அப்பிரதேசத்தில் 325 கடற்றொழில் குடும்பங்கள் வாழ்ந்திருக்கின்றன. அப்பிரதேசத்தில் மகாவித்தியாலயம், உபதபால் அலுவலகம், கூட்டுறவுச் சங்கங்கள், வணக்கஸ்தலங்கள், சனசமூக நிலையங்கள் என்பன இருந்திருக்கின்றன. தற்பொழுது, கடற்படைமுகாம் அமைப்பதறகாக அப்பகுதியினை உயர் பாதுகாப்பு வலயமாக அறிவித்திருக்கின்றார்கள்.

இப்பிரதேசம் கடற்றொழிலில் வளர்ச்சி கண்ட ஒரு பிரதேசம். எனவே, இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் அவர்கள் பாதுகாப்புத் தரப்பினருடன் கதைத்து, அங்கு கடற்படைமுகாம் அமைப்பதனைத் தடுப்பதற்கு முன்வரவேண்டும். அதேபோல், மயிலிட்டிப் பிரதேசத்தையும் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இவ்விடயமானது, அப்பிரதேச மக்கள் மத்தியில பரபரப்பையும், குழப்பத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றது. எனவே, அமைச்சர் அவர்கள் இப்பிரதேசங்களுக்கு நேரடியாக விஜயம்செய்து, இவ்விடயம் தொடர்பாக அங்குள்ள கடற்றொழில் சங்கங்களுடனும் சமாசங்களுடனும் பேச்சுக்களை நடாத்தி, அவர்களது உணர்வுகளைப் புரிந்துகொண்டு, உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆழ்கடலில் நீண்ட நாட்கள் தங்கியிருந்து மீன்பிடிக்கும் மீன்பிடிக் கலங்களை வடபகுதி மீனவர்களுக்கும் பெற்றுக்கொடுப்பதற்கு நீங்கள் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றீர்கள். எனினும், இக்கலங்களைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு ஏற்றவகையில், வட பகுதியில் மீன்பிடித் துறைமுகங்களை அமைப்பது மிக, மிக அவசியமாகும். ஏற்கெனவே, வடமாகாண கடற்றொழில் சமாசத்துக்கு வழங்கப்பட்ட கலங்கள் நீர்கொழும்பு மீன்பிடித் துறைமுகத்திலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அதனை வடபகுதிக்குக் கொண்டு சென்று மீன்பிடிப்பதற்கு உரிய துறைமுக வசதிகள் இல்லாமையினால், காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே, அமைச்சர் அவர்களே, நீங்கள் இவ்விடயம் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறே, உடைந்த நிலையிலுள்ள படகுகளைத் திருத்தி அமைப்பதற்குரிய நிலையமொன்றை வடமாகாணத்தில் அமைப்பது மிக மிக அவசியமாகும். கடந்த காலங்களில் 'சீனோர்' நிறுவனத்தினால் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எனினும், தற்பொழுது 'சீனோர்' நிறுவனம் தங்களுடைய அமைச்சின்கீழ் இல்லாதபடியினால், இதற்கு ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென வலியுறுத்துகின்றேன்.

இச்சபையில் வடமாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்ட ஒரு விடயத்தை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதாவது, எமது வடபிராந்திய கடற்பிரதேசத்தினுள் இந்திய மீனவர்களின் வருகையினால் அப்பிரதேசத்திலுள்ள மீன்வர்களுடைய தொழில் பாதிக்கப்படுகின்றது. இது விரைவாகத் தீர்க்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இல்லாவிடில், தினமும் ஏராளமான கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்பட்டுக்கொண்டே இருக்கும். இதுதொடர்பில் இலங்கை அரசாங்கம் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதினூடாக ஒரு சுமூகமான தீர்வு எட்டப்படவேண்டும்.

ஏற்கனவே கௌரவ உறுப்பினர் வினோ அவர்கள், முல்லைத்தீவு மாவட்டத்திலே கரைவலை இழுப்பதற்கான அனுமதி - உரிமம் - வழங்கப்படாமை தொடர்பாகக் குறிப்பிட்டார். நீண்டகால யுத்தம் காரணமாக - 30 வருடங்கள் - கடந்த காலங்களில் அந்த உரிமத்தைப் பெறுவதற்கான ஒரு சூழல் அந்த கடற்றொழிலாளர்களுக்கு அன்று இருககவில்லை. இன்று நாட்டிலே சட்டதிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இன்றைய இந்தச் சூழலிலும் அவர்களுக்கு அந்த உரிமத்தைப் பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் அவர்களுக்கு கடற்றொழிலில் ஈடுபடுவது பிரச்சினைக்குரிய ஒன்றாக இருக்கின்றது.

இதேவேளையில், வெளி மாவட்டங்களிலிருந்து வந்து அங்கு கரைவலைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் உள்ளூர் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கியிருக்கிறார்கள். இது விடயத்தில் அமைச்சர் உரிய நடவடிக்கைகளை எடுப்பாரென்ற நம்பிக்கையை நான் இங்கு வெளிப்படுத்துகின்றேன்.

அது மட்டுமல்ல, முல்லைத்தீவு மாவட்டத்தின் மாத்தளன் தொடக்கம் வட்டுவாகல் வரையிலான கடற்பகுதியில் மீன் பிடிப்பதற்கான அனுமதி பாதுகாப்புத் தரப்பினரால் இதுவரை வழங்கப்படவில்லை. இது குறித்தும் நீங்கள் கவனத்திலெடுக்க வேண்டும். உங்களது கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளின்போது காணப்படும் இணக்கப்பாடுகள் நடைமுறையில் செயற்படுத்தப்படுவதில்லை.

எத்தனையோ பேச்சுவார்த்தைகளில் அமைச்சருடன் நானும் கலந்துகொண்டிருக்கின்றேன். பாஸ் நடைமுறை தேவையில்லை. sylinder பாவனை மூலம் கடலட்டை மற்றும் சங்கு குளியல் செய்வதற்கு யாருக்கும் MOD permission கொடுக்கப்படுவதில்லை என்றெல்லாம் அங்கு உறுதிமொழிகள் தரப்படுகின்றன. ஆனால், நடைமுறையில் அதுதான் அங்கு மீறப்படுகின்றது. அங்கிருக்கும் படைத்தரப்புக்கள் அந்தந்த பகுதிகளுக்கேற்ப சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதால் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. கடற்றொழிலின் வளர்ச்சியை அது பாதிக்கிறது.

குறிப்பாக, வடமராட்சி கிழக்கிலே அட்டை, சங்கு பிடிக்கும் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு நிபந்தனையின் அடிப படையில்தான் அனுமதி கொடுக்கப்பட்டதாக கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்திருந்தது. உள்ளூர் கடற்றொழிலாளர்களது உபகரணங்களையும், மனித வலுவையும் மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்ற நிபந்தனையுடன் அந்தத்துறையில் அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். ஓரிரு நாட்களுக்கு அந்த நிபந்தனை இருந்தது. பின்னர் தென்னிலங்கையைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் sylinder பாவனை மூலம்.

(06ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். போதனா மருத்துவமனைக்கு இந்திய அரசின் உதவித்திட்டம்

## அதிகாரிகள் குழு திடீர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையைத் தரம் உயர்த்துவது தொடர்பான சாத்தியக்கூறுகள் குறித்தும் இதற்காக மேற்கொள்ள வேண்டிய உதவித் திட்டங்கள் குறித்தும் இந்திய வைத்திய அதிகாரிகள் குழு நேரடியாக ஆராய்ந்துள்ளது.

இந்தியாவில் இருந்து வருகை தந்த மேற்படி மருத்துவ அதிகாரிகள் குழு ஒன்று நேற்றைய தினம் யாழ். போதனா மருத்துவமனைக்கு விஜயம் செய்தது.

எட்டுப்பேர் அடங்கிய இக்குழுவினர் இந்த மருத்துவமனையின் தற்போதைய நிலவரம் குறித்துப் பணிப்பாளருடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நேற்றையதினம் நடாத்தினர்.

அத்துடன் மருத்துவமனையின் அனைத்துப் பகுதிகளுக்கும் இக்குழுவினர் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். தமது விஜயம் குறித்தும் மருத்துவமனைக்கான உதவித்திட்டம் குறித்தும் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை இக்குழுவினர் தயாரிக்கவுள்ளனர் என்றும தெரியவருகிறது. (எஸ்)

# கிராம அபிவிருத்தி அமைப்பு தனங்கிளப்பில் நேற்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

மேற்படி கிராம அபிவிருத்தி அமைப்பு தனங்கிளப்பில் நேற்று ஈ.பி.டி.பியின் தென்மராட்சிப் பொறுப்பாளர் ஏ.எஸ்.வலன்ரைன் அவர்களினால் பிற்பகல் 3.00 மணிக்குத் திறந்துவைக்கப்பட்டது.

அந்த நிகழ்வில் சமூக வலுவூட்டாளர் மி.அருந்தவகுமார், தலைவர் எஸ்.ஆனந்தராசா, செயலாளர் ம.சுரேந்தர், பொருளாளர், சு.சுகிர்தா, உப செயலாளர் பா.தர்மினி, நிர்வாக உறுப்பினர்கள் நபாமினி, க.சஸ்மினி, பொ.ரஞ்சினி, சமூக வளவாளர் ஜெ.விஜேந்தி ஆகியோர் கலந்துகொண்டனர். திறப்பு விழாவில் பங்கு பற்றிய மக்கள் தங்கள் பிள்ளைகள் தனங்கிளப்பில் இருந்து பாடசாலைக்குச் சென்றுவருவதற்காகப் பேருந்து வசதியினையும், குடிநீர் வசதியையும் செய்துதருமாறு கோரிய போது ஈ.பி.டி.பி பொறுப்பாளர் ஏ.எஸ்.வலைன்ரைன் அவர்கள் மேறபடி மக்களின் கோரிக்கைகளை மாண்பு மிகு அமைச்சர் கே.என்.டகளஸ் தேவானந்தா அவர்களுக்குத தெரியப்படுத்தி விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

# புதிய வகை போதைப்பொருள் இலங்கைக்கு கடத்தல்

## அமைச்சர் தினேஷ் தகவல்

ஹெரோயின், ஹஷீஸ், கொகேய்ன் ஆகியவற்றுடன் மெத்தபித்தமைன் எனும் புதிய வகைப் போதைப்பொருளொன்று கடந்தவருடம் முதற்தடவையாக இலங்கைக்கு கடத்திவரப்பட்டதாக நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

கடந்தவருடம் 26 கிலோ மெதபித்தமைன் போதைப்பொருள் இலங்கை அதிகாரிகளால் கைபபற்றப்பட்டன.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் அரசாங்கத் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தன இவ்விபரங்களை சபையில் தெரிவித்தார்.

கடந்த 10 வருடகாலத்தில் 287 கிலோகிராம் ஹெரோயின், 6.252 கிலோகிராம் ஹஷீஸ் மற்றும் 16 கிலோகிராம் கொகேய்ன் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த வருடம் 116.5 கிலோகிராம் ஹெரோயினும் இவ்வருடம் நவம்பர் மாதம் வரை 4.8 கிலோகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பல இடையூறுகளுக்கு மத்தியிலும் இம்முற்றுகைகளை மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

மெதபித்தமைன் எனும் புதிய வகை போதைப் பொருள் இலங்கைக்கு எவ்வாறு கடத்திவரப்பட்டது எனவும், இது இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றும் அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு அம்சமா எனவும் தயாசிறி ஜயசேகர எம்.பி கேள்வி எழுப்பினார்.

இக்கேள்விக்கு அமைச்சர் தினேஷ்குணவர்தன பதிலளிக்கையில் இது 1977 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட் திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் ஒரு விளைவு எனக் கூறினார்.

அப்போது மேற்படி ஆட்சி 1994 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்துவிட்டது எனவும் இதனால் அத்தவறை திருத்திக்கொள்வதற்கு ஏராளமான கால அவகாசம் இருந்தது எனவும் தயாசிறி ஜயசேகர கூறினார்.

# விசேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நலச்சேவை அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆகியவற்றின் அனுசரணையில் யாழ். மத்திய கல்லூரியில் விசேட கருத்தரங்கு ஒன்று நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் ஆளுநர், அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள், இராணுவ தலைமையக உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், புலம்பெயர்ந்தோர் குடும்பங்கள் அரச அனுமதிபெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் என பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எஸ்)

# தென்னாபிரிக்க அணி வலுவான நிலையில்



இலங்கை அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 9 விக்கெட் இழப்பிற்கு 389 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

சென்சூரியன் நகரில் நடைபெறும் இப்போட்டியில் முதல் நாளான நேற்று முன்தினம் தென்னாபிரிக்க அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 90 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இரண்டாவது நாளான நேற்று மேலும் ஓட்டமெதையும் பெறுவதற்குள் டேல் ஸ்டெய்ன் ஆட்டமிழந்தார்.

173 ஓட்டங்களைப் பெற்றபோது 5 ஆவது விக்கெட்டையும்இழந்து அவ்வணி தடுமாறியது. ருடோல்வ் 44 ஓட்டங்களுடனும் ஹஸிம் அம்லா 18 ஓட்டங்களுடனும் ஜக்கலிஸ் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

எனினும் டி வில்லியர்ஸ் 99 ஓட்டங்களைப் பெற்று அணியை பலபடுத்தினார். அஸ்வெல் பிரின்ஸ் 39 ஓட்டங்களைப்பெற்றார். பின்வரிசை வீரர்களான பிலாந்தர், மோர்கெல ஆகியோர் தலா 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோதிலும் நேற்றைய ஆட்டநேர முடிவின்போது மார்க் பௌச்சர் 49 ஓட்டங்களுடனும் 11 ஆவது வரிசை வீரர் இம்ரான் தாஹிர் 24 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். தாஹிர் 24 பந்துகளில் 24 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் பந்துவீச்சாளர்களில் திசேர பெரேரா 114 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் சானக வெலகெதர 87 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 180 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது தென்னாபிரிக்க அணி 209 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது.

### ஐ.நா.நிபுணர்குழுவின்...

செய்மதிப்படங்கள் இந்த அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் படைப்பிரிவுகள் எங்கெங்கு நிலைகொண்டிருந்தன என்ற விபரங்களை, தேவைப்படும் ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கவுள்ளோம். என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். படையினரால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஐ.நாவிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### யுத்தத்தால்...

காயங்களை ஆற்றுப்படுத்துவது மிகவும் அவசியமானது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் இழப்புக்களை எதிர்நோக்கியவர்ளுக்காக விசேட தேசிய நிகழ்வு ஒன்று வருடாந்தம் நடத்தப்படவேண்டும். அரசியல் ரீதியான இணக்கப்பாடு இன்மையே நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் பிரதான தடையாக அமைந்துள்ளது.

இன முரண்பாட்டுக்கு சிங்கள தமிழ் அரசியல்வாதிகள் பொறுப்பு சொல்லவேண்டும். தெற்கின் பிரதான இரண்டு கட்சிகளும் கூட்டாக இணைந்து ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் தீர்வுத்திட்டத்தை தமிழ்த் தலைவர்களுக்கு வழங்கியிருந்தால் பாரியளவு உயிர்ச் சேதங்களை தவிர்த்திருக்க முடியும். இதேபோன்று தமிழ்த் தலைவர்கள் ஆயுத போராட்டத்திற்கும் பிரிவினைவாதத்திற்கும் கூடுதல் ஆதரவு வழங்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக தைரியமாக தமிழ்த் தலைவர்கள் குரல் கொடுத்திருக்கவேண்டும எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை படையினர் பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குதல் எதனையும் நடத்தவில்லை எனவும் ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நடைபெற்ற மோதல்களின்போது தவறுதலாக பொதுமக்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றதனை மறுப்பதற்கில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், படையினர் வேண்டுமென்றே பொதுமக்கள் நிலைகள் மீது தாக்குதல் நடத்தவில்லை. குறிப்பாக யுத்த சூன்ய வலயங்களின் மீது படையினர் தாக்குதல் நடத்தவில்லை. புலிகளின் பிடியிலிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட பொதுமக்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். நிலக்கண்ணி வெடிகள், யுத்தம் இடம்பெற்ற வலயங்களை பொதுமக்கள் கடந்து சென்றமை உள்ளிட்ட சில காரணிகள் பொதுமக்கள் இழப்புக்களுக்கு வழிகோலியது.

பொதுமக்கள் இழப்புக்களை குறைவாகப் பேணவேண்டும் என்பதில் பாதுகாப்பு தரப்பினர் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டனர். எனினும், தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் தாக்குதல்களுக்கு இலக்காகினர். பொதுமக்களை பாதுகாத்து புலிகளை அழிக்கவேண்டும் என்ற நோக்கில் யுத்த தந்திரோபங்களையும் வியூகங்களையும் அரசாங்கம் வகுத்தது. பொதுமக்களை பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கிலேயே யுத்தத்தின் இறுதி நாட்களில் படையினர் மிக மெதுவாக முன் நகர்வுகளை மேற்கொண்டதாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நல்லிணக்க ஆணைக்குழு...

முடியாது. இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாக ஆராய்ந்து இது பற்றிய தங்களது முடிவை அறிவிக்கும் உடனடியாக இது பற்றி எதுவும் தெரிவிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

### நல்லிணக்க...

இடம்பெற்றது தொடர்பாக சாட்சியங்கள் இருக்குமானால், அவை குறித்து தீர விசாரித்துக் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்ற நம்பிக்கை உள்ளதாகக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக குழுவின் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது பொதுமக்களை இலக்கு வைத்துப் படையினர் தாக்குதல் எதனையும் நடத்தவில்லையென ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பான உண்மைத் தகவல்களைத் திரட்டி எவராவது குற்றமிழைத்திருந்தால் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்றம் தொடர்பான காணொளிகளின் நம்பகத் தன்மை மற்றும் அவற்றின் உள்ளடக்கம் தொடர்பில் சந்தேகத்தை தோற்றுவிக்கும் தொழில்நுட்பப் பிரச்சினைகள் உள்ளதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களின் இன விகிதாசாரத்தை மாற்றுவதற்கு அரசாங்கம் முனைவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு அர்த்தமற்றது இலங்கையில் எந்தவொரு இடத்திலும் காணியினை கொள்வனவு செய்யும் உரிமை அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் உண்டு என்பது அடிப்படை உரிமையாகும் என அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது.

சிறுபான்மை மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் போது நியாயமான கோரிக்கைகளை உள்வாங்கி அவற்றை நிறைவேற்றுவதற்கான பேச்சுவார்த்தைகளை தமிழ் அரசியல் தலைமைகளுடன் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

சுயநலப் போக்குகளுக்காக நடத்தப்படும் அரசியல் நடவடிக்கைகளை விடுத்து தேசிய பிரச்சினைகளின்போது பொது உடன் பாட்டுடன் தீர்மானம் எடுக்க அனைத்து அரசியல் கட்சிகளும் முன்வரவேண்டும் என்ற ஆணைக்குழுவின் பரிந்துரையை அரசாங்கம் முழுமனதாக ஏற்றுக்கொள்கிறது. அத்துடன், சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் வைத்திருப்பதை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகக் காணப்பட்டது என்றும் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமூக வாழ்வின் சகல அம்சங்களிலிருந்து பாதுகாப்புப் படையினர் வாபஸ் பெறப்படுவர் சிவில் நிர்வாகத்தில் தமது ஈடுபாட்டை பாதுகாப்புப் படையினர் விலக்கிக் கொள்வர் குறிப்பாக காணி விவகாரங்களில் எவ்வித தீர்மானம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலும் அவர்கள் பங்குபற்றமாட்டார்கள் எனவம் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கில் கண்ணிவெடிகளை அகற்ற ஜப்பான் 86 மில்லியன் நிதியுதவி



(கொழும்பு)
ஜப்பானிய அரசாங்கத்தின் உதவிகள் அடிமட்ட மக்களை நேரடியாகச் சென்றடைகின்றன என நம்புவதாக இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிடோ ஹெபோ நேற்று தெரிவித்தார்.

இந்த உதவிகளின் ஊடாக நிலையான அபிவிருத்தி மற்றும் சமாதானத்தை இலங்கையில் ஏற்படுத்த முடியும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் ஒரு கட்டமாகவே உள்நாட்டில் இடம்பெயர்ந்த வட மாகாண மக்களை மீளக்குடியேற்றுவதற்காக கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டிற்காக ஜப்பானிய அரசு 86 மில்லியன் ரூபா நிதியுதவியளிப்பதாக ஜப்பானிய தூதுவர் தெரிவித்தார்.

இச்செயற்திட்டம் ஹாலோ ட்ரஸ்ட் எனும் அரசசார்பற்ற நிறுவனத்தின் ஊடாக அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இது தொடர்பிலான ஒப்பந்தத்தில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிடோ ஹெபோ மற்றும் ஹாலோ ட்ரஸ்ட் நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் அடம் ஜாசிங்சி ஆகியோர் நேற்று வெள்ளிக்கிழமை கைச்சாத்திட்டனர்.

இதேவேளை, உள்நாட்டில் இடம்பெயர்ந்த வட மாகாண மக்களை மீளக்குடியேற்றுவதற்காக கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டிற்கு ஜப்பானிய அரசாங்கம் இதுவரை 250 மில்லியன் ரூபாவினை பல அரசசார்பற்ற நிறுவனங்களின் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாடு கடத்தப்பட்ட ஐம்பது பேர் கட்டுநாயக்கா வந்தடைந்தனர்



(கொழும்பு)
பிரிட்டனிலிருந்து நாடு கடத்தப்பட்ட 50 இலங்கையர்கள் நேற்று கொழும்பை வந்தடைந்தனர்.

விசேட விமானம் ஒன்றின் மூலம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் அவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததாக விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலகம் தெரிவித்தது.

இவர்களுடன் பாதுகாப்பு அதிகாரிகள் சிலரும் நாட்டை வந்தடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் தஞ்சம் கோரி இவர்கள் பிரித்தானியாவிற்கு சென்றுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலகம் கூறியுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தவர்களில் 48 ஆண்களும் 7 பெண்களும் அடங்குகின்றனர். இவர்கள் பதுளை, யாழ்ப்பாணம், கண்டி, வவுனியா, திருகோணமலை, வத்தளைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் மீது புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

# புதிய கொள்கலன் முனையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)
கொழும்பு துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் தென் துறைமுக அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய கொள்கலன் முனையத்தின் நிர்மாணப்பணிகள் நேற்று கொழும்பு துறைமுகத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

புதிய கொள்கலத்தின் நிர்மாணத்தை தொடர்ந்து அதன் கொள்கலன் கையாளும் திறன் அதிரிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. தற்போதய கொழும்பு துறைமுகத்தின் வருடாந்த கொள்ளளவு 4.5 மில்லியன் ஆகும். 2010 இதன் பெறுமானம் 4.1 மில்லியனாக காணப்பட்டது. இதன் பெறுமானம் அதிகரித்த வண்ணம் செல்கின்ற காரணத்தால் கொள்கலன் கையாளும் திறனையும் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. என துறைமுக பிரதி அமைச்சர் ரோஹித அபயகுணவர்தன தெரிவித்தார்.

மேலும் கொழும்பு துறைமுக விரிவாக்கல் திட்டம் முழுமையாகப்பட்டதை தொடர்ந்து, எதிர் வரும் ஏப்ரல் மாதம் முதல் தென் துறைமுக அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதைத்தவிர 1,200 மீற்றர் நீளமான மூன்று படகுத்துறைகளும் தென் துறைமுக அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் இதில் மூன்று கப்பல்களை நங்கூரமிடவும் முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொன்சேகாவின் மேன்முறையீடு தள்ளுபடி செய்தது நீதிமன்றம்

(கொழும்பு)
இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தினால் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேவிற்கு வழங்கப்பட்ட 30 மாத கால சிறைத் தண்டனையை எதிர்த்து தாக்கல் செய்த மேன் முறையீட்டு மனுவை கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.

எரிக் பஸ்நாயக்க, ஏ.டபிள்யூ. ஏ. சலாம், உபாலி அபேரத்ன ஆகியோர் கொண்ட நீதிபதிகள் குழாம் ஏகமனதாக இத்தீர்ப்பை வழங்கியது.

தனது மருமகனான தனுன திலகரட்ன இராணுவத்தினால் தண்டிக்கப்படக்கூடிய குற்றமொன்றை புரிந்தமை குறித்து வெளிப்படுத்தத் தவறியதாக இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தில் சரத் பொன்சேகா குற்றம் சுமத்தப்பட்டிருந்தார்.

மனுதாரர் ஏற்கனவே சிறைத் தண்டனை அனுபவித்து வருபவர் என்பதை கருத்திற் கொண்ட மேன் முறையீட்டு நீதிமன்றம் வழக்குச்செலவுத் தொகையை செலுத்தும்படி உத்தரவிடவில்லை

## ஊடகப் பயிற்சி நெறி இன்று காலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
சிகரம் ஊடக இல்லத்தினால் நடத்தப்படவுள்ள ஊடகப் பயிற்சி நெறி இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சிகரம் ஊடக இல்லத்தில் இடம் பெறவுள்ள இப்பயிற்சி நெறிக்கு பதிவினை மேற்கொண்டவர்களை வருகை தருமாறு ஊடக இல்லப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி நெறியானது கற்கைநெறி விளக்கம் மற்றும் தொழில் வழிகாட்டி ஆகிய நோக்கங்களை கொண்டதாக நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கவனத்தை திசை திருப்புவதற்காக 13 ஆவது திருத்த சட்டமூலம் பயன்பாடு

## கூறுகிறது விக்கிலீக்ஸ்

(கொழும்பு)
கவனத்தை திசை திருப்பும் நோக்கில் இலங்கை அரசாங்கம் 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தைப் பயன்படுத்தியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெஹான் பெரேரா ஆகியோர் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளனர்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு ராஜதந்திரத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கபட்டுள்ளன.

நீண்ட கால அரசியல் தீர்வுத் திட்டம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புக்கள் தொடரபில் பேச்சுவார்த்தை நடத்துவதனை தவிர்ப்பதற்காக அரசாங்கம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதாக இவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரையில் அரசாங்க அதிகாரிகள், தன்னார்வ தொண்டு நிறுவன ஊழியர்கள், ஊடகவியலாளர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்டோருடன் நடைபெற்ற சந்திப்புக்கள் தொடர்பில் அமெரிக்கத் தூதரகம் தகவல்களை அனுப்பி வைத்துள்ளது.

2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி அமெரிக்கத தூதுவர் பற்றீசியா புட்டினசினால் இந்தத் தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாற்றுக் கொள்கைகளுக்காக கேந்திர நிலையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து, தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெஹான் பெரேரா, கொழும்புப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி கீதபொன்கலன், சவூதி அரேபியாவிற்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜாவெட யூசுப் ஆகியோருடன் நடத்தப்பட்ட சந்திப்பினை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் சமூகத்தின் பிரச்சினைகள், இடம்பெயர் மக்கள் சுதந்திரமாக நடமாடுதல், அரசியல் சாசனத் திருத்தம் போன்றன தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இடம்பெயர் மக்களை தடுத்து வைத்தல் இலங்கை சட்டத்திற்கு முரணானது என பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமையில் மாற்றம், சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களின் அவசியம் ஆகியனவற்றை குறித்த புத்திஜீவிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அதிகாரப்பகிர்வு, 13 ஆம் திருதத் சட்ட மூலத்தின் பலவீனங்கள், மாகாணசபைகளுக்கு அரசாங்கம் போதியளவு அதிகாரங்களை வழங்காமை போன்றன தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி 17 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்தாமை, ஆணைக்குழுக்கள் அரசியல் மயப்படுத்தல் போன்ற விடங்கள் குறித்தும் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

# சுயவிருப்பின் பேரிலேயே குற்ற ஒப்புதல் வாக்குமூலம்

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவை இலக்கு வைத்து கடந்த 1999 ஆம் ஆண்டு புலிகளினால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் சுய விருப்பின் பேரிலேயே பொலிஸாரிடம் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குறித்த நபர் கூறிய கருத்துக்கள் சுயவிருப்பின் பேரில் வழங்கப்பட்டதா என உறுதிசெய்ய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி வராவெவ முன்னிலையில் விவாதம் இடம்பெற்றது.

பொலிஸார் தன்னை சித்திரவதைக்கு உட்படுத்தி குற்றத்தை ஒப்புக் கொள்ள வைத்ததாக வழக்கின் பிரதான சந்தேகநபரான வேலாயுதம் வரதராஜா நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த சந்தேகநபரை விசாரணை செய்த பொலிஸ் மற்றும் அதிகாரிகள் மற்றும் நீதிமன்ற வைத்திய அதிகாரிகளிடம் சாட்சியங்கள் பெறப்பட்டதன் பின், சந்தேகநபர் சுய விருப்பின் பேரிலேயே பொலிஸாரிடம் குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டதாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# இளைஞர் பாசறை

(வடமராட்சி)
தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சினால் நடத்தப்படும் சமூக ஒருமைப்பாட்டை முதன்மையாகக் கொண்ட இளைஞர் பாசறை இன்றும் நாளையும், நாளை மறுதினமும் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தேசிய இளைஞர் சேவை மன்றத்தினூடான கலை கலாசாரம் சம்பந்தப்பட்ட 150 பேர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்கூறப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கிடையே சமாதானத்தையும், ஒற்றுமையையும் சமூக ஒருமைப்பாட்டையும் முதன்மையாகக் கொண்ட சமூகத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும் என யாழ்.மாவட்ட செயலக தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார். (116)

# புதுக்குடியிருப்பில் வாழைச் செய்கை

(புதுக்குடியிருப்பு)
புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களில் பலர் வாழைச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கிளிநொச்சி விசுவமடுப் பகுதியில் இருந்து மொந்தன், கப்பல், கதலி போன்ற இனங்களையுடைய வாழைக் குட்டிகளை மொத்தமாகக் கொள்வனவு செய்து தங்கள் காணிகளில் நாட்டி வளர்த்து வருகின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.